J7

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

பனிரண்டு மாலை.

இஃது

கீழக்கரையிலடங்கி மறைந்திராநின்ற

மெய்ஞ்ஞான சொரூபராகிய

காமிலொலி

ஷெய்க்கப்துல் காதிர் லெப்பை

ஆலிம் ஸாஹிப் அவர்களாற்பாடி

முன்னோர்களால்,

அச்சிடப்பட்ட பிரதிக்கிணங்க

மேலப்பாளையம்

காளை ஹஸனலிப் புலவரவர்களால்

பார்வையிட்டு

சென்னை, திருவல்லிக்கேணி,

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்

அவர்களால் தங்களது

ஷாஹுல் ஹமீதிய்யா அச்சியந்திர சாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

சுத்தப் பதிப்பு

1952 [அணா 8

Q7:417
N52

112033

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

பனிரண்டு மாலை.

இஃது

கிழக்கரையிலடங்கி மறைந்திராநின்ற

மெய்ஞ்ஞான சொரூபராகிய

ஸ்ரீகாமிலொலி

ஷெய்க்கப்துல் காதிர் லெப்பை,

ஆலிம் ஸாஹிப் அவர்களாற்பாடி,

முன்னோர்களால்

அச்சிடப்பட்ட பிரதிக்கிணங்க

மேலப்பாளையம்

காளை ஹஸனலிப் புலவரவர்களால்

பார்வையிட்டு

சென்னை, திருவல்லிக்கேணி,

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்

அவர்களால் தங்களது

ஷாஹுல் ஹமீதிய்யா அச்சியந்திர சாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

சுத்தப் பதிப்பு.

இதன் விலை] 1952. [அணா 8

பிஸ்மில்லாஹி.

இஃது

கிழக்கரையிலடங்கி மறைந்திரா நின்ற
மெய்ஞ்ஞான சொரூபராகிய
காமிலொலி

ஷெய்கப்துல் காதிர் லெப்பை

ஆலிம் ஸாஹிபவர்கள்பாடிய மாலைகளில்
இதற்கு மூந்தி
அச்சிட்டு வழங்காநின்ற
ஷரீஅத்து மாலை நீங்கலாக
இதிலடங்கியிரா நின்ற மாலைகளாவன-

தரீக்கத்து மாலை
ஹக்கீகத்து மாலை
மஃரிபத்து மாலை
தௌஹீது மாலை
சிர்று மாலை
திக்று மாலை
பிக்று மாலை
உஜூது மாலை
ஷுஹூது மாலை
அதபு மாலை
அறிவு மாலை
பயானுத்தீன் மாலை

இப்பனிரண்டுமாலை நீங்கலாக ஷெ ஆலிம் ஸாஹிபவர்கள் பாடிய பதினெட்டு மாலையும் இனிமேல் அச்சிடப்படும்.

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

இஃது

தரீக்கத்து மாலை.

தொங்கல்.

அல்லா தனக்கெல்லாப் புகழ்ச்சிகளும் அவன்றான் ஆலத்தைப் படைத்தாள்கிறான், எல்லா முஃமீனுக்கும் காபிருக்கும் இரக்கம் புரிந்தவனிறையவனே, வல்லாயாதொரு வணக்கத்திலும் கூலி கொடுக்குமவ்* வைகளிலே, நல்லாவெளியாக ராஜாவானோன் நாயனல்லாது வேறில்லையே. 1

உன்னை வணங்கிறோ மதுதனக்கு உதவி தேடுகிறோ முன்னிடத்திற், பின்னைச்செவ்வுற்ற பாதையிலே பேணி யெங்களைத் தரிபடுத்தாய், அன்னை பிதாவிலுங் கிருபையான அன்பியா அவுலியாபாதையிற், சின்னஞ் சினத்தையும் வழிகேட்டையுஞ் சேர்ந்தோர் பாதையில் தவிர ஆமீன். 2

அல்லாவைத் தொட்டுங் கேட்டோனுக்கு அல்லா திருவுளம் பற்றினது, சொல்லு முஹம்மதே யவனொருத்தன் துய்யஅல்லாஹுசமது என்றும், எல்லாத்தையும் விட்டுந் தேவையற்றோன் எல்லாமவனளவிற்றேவையாம், வல்லவொருத்தனைப் பெறவுமில்லை வலியோனைப் பெறப்படவுமில்லை, வல்லோனவனுக்குச் சமானமாக வஸ்தொன்றுமில்லை யென்றறிவாய். 3

எல்லாப்புகழையு முடையவனை எப்போதும் திக்று செய்கிறவர், நல்ல தரீக்கத்தின் படி நடந்தால் நாயனளவிலே வாசிலாவார். அல்லாவை யறிந்தோர்க ளெல்லாம் ஆர்ப்புமட்டு நல்லமலொழியார், வல்லவொரு சுன்னத்தை விட்டவன் வலியநாயனை யறியமாட்டான்,

ஷரீஅத்தின்படி நடந்தவர்கள் சகலபாக்கியம் பெற்றுக் கொள்வார், தரீகத்தின்படி நடந்தவர்கள் ஷறகிலொன்றையும் சறுக விடார், சரியாக ரெண்டுங் கொடுவந்தவர் ஷர்றிலொன்றையுஞ்

* அவ்வைகள்—அந்நாள்

செய்யமாட்டார், மரியாதையுண்டுந் துனியாவிலும் மறுமை நாளிலு மென்றறிவாய். 5

பேணி நடப்பது, தரீக்கத்தென்று பெரியோர்கள் சொல்லி யிருக்கிறார்கள், நாணமில்லார்க்கு ஈமானில்லை யென்று நவின்றார் கள் நபி ஹதீதில், வாணிபம் செய்யும் பேர்களதின் வகையை யறியாரில் வட்டிசேரும், காணிப்ரயோசன மாகிலுமாம் நடன் மேல் வந்தது பலிசையாமே. 6

உறஹின் மறுத்தபாநாலுண்டுகேள் ஒலியானோரெல்லாமதைப் பேணினார், ஷறகின் ஹறுமதைப் பேணினவன் சரியான முஃமினா யிருப்பான், சருகுதலான சந்தாபத்திற் சார்ந்து நடந்தார்கள் சாலி ஹீன்கள், சிறிது ஹலாலையும் தவிர்ந்திடுவார் சேர்ந்த முத்தகீ னென்றறிவாய். 7

நாலாமறுத்தபாவாகிறது நல்லசித்தீக்கின் பேணிலது, மேலே வந்ததைப் பேணியபின் வேணுமானதை யெடுத்ததன்பின், மேலாம்பாராகிய சித்தீக்கும் நம்மிறையைத்தவிரமற் றுள்ளவெல் லாம், காலாற்றள்ளுவார் நல்கைக்காணார் காமிலொலியுல்லா வென்றறியே. 8

ஷறகின்படி நடக்காதவர்கள் சத்துராதியா மல்லாவுக்கு; உறஹின் படிக்குயெப் படி நடப்பார் ஒருபோதுமதின் வாடை யெத்தார், மறையின்படியே தௌஹீது செய்யார் மவுலாவையறவே யறியார், அறிவைப் படித்ததின் படிநடந்தோர் அவர்தான் தரீக் கத்தை யுடையவரே. 9

சுவர்க்கத்திற் கெல்லாந் திறவுகோலாம் தூயமிஸ்கீன்கள் மேலுவப்பு, துவர்க்கமாய் வந்த துய்யநபி துலக்கமாயிதை யறிவித் தார்கள், எவர்க்கு மிதுபோதும் சுவர்க்கம்பெற இறையோன் முகத்துக்காய்க் கொடைகொடுத்தால், நலமான காரியமதனால் நல்லார் பொல்லாரை யறியலாமே. 10

பேணுதலென்னும் தரீக்கத்திலே பேணி நடந்தார்கள் பெரியோ ரெல்லாம், வேணுமானதை யெடுத்து வந்தார் வேண்டாக் கருமத்தைத் தவிர்த்து வந்தார், தோணினபடி நடக்கவில்லை துன்யாவின் பேரிலுவப்புமில்லை, காணுமலுஹ றல்லாத்திலேயும் ஹக்கை ஷாஹிதுதான் செய்வார்களே. 11

ஷரீ அத்தின்வழிக் குவமையறிய சலாவத்தோணியைப் போலேயாகும், தரீக்கத்தெனும் பாதைக் குவமையறி சலாவங் குளிக்கிற கடற்போலேயாம், சரியானஹகீகத் துக்குவமை சலா வச்சிப் பியைப் போலேயாகும், அரியநாயனே யறிகிறது அதற் குள்ளிருக்கிற மூத்துப் போலாம். 12

மூத்துபோலொத்த மஃரிபத்து மூன்றுங் கூடினுற் பெற்றுக் கொள்வான், ஒத்தபாதையிலே நடப்பான் ஒற்றைச்சொல்லாகத் தான் சொல்லுவான், பெற்றுக்கொள்ளுவான் மஃரிபத்தைப் பேணி தரீக்கத்தின் படிநடந்தோன், மற்றபேர்கள்தான் ஒரு போதிலும் மவுலா அளவிலே சேரமாட்டார், செத்தமையித்தைப் போலிருந் தோர் சேர்வார் அபூபக்கர் சித்தீகைப்போல். 13

அல்லா அளவிலே நடக்கப்பாதை அன்பாசெனுமூச்சி னெண் ணமென்றும், எல்லாத்திலுமெத்த முடிகினது இறையைத்தவிரமற் றுள்ளவெல்லாம், குல்லாகவெறுத் திருப்பதுவுங் குதாவை யெப் போதுந் திக்றுசெய்வதும், வல்லவொறுத்தனு மிதைப்பேணினல் வல்லோனளவிலே வாசிலாவான். 14

உஜூதுக்குமஃனு ஒருத்தன் ஒருத்தனைச்சேரும் போலே யல்ல, உஜூதென்றது தன்னைக்காணுதவன் உசூலானுனென்று அறிந்துக்கொள்வாய்.

தரீக்கத்து மாலே முற்றிற்று.

ஹகீக்கத்து மாலே.

அல்லாதிருநாமந் தன்னைக்கொண்டும் அவன் மேற்புகழ்கின்ற ஹம்துகொண்டும், நல்லறசூல்சல வாத்துக்கொண்டும் நயமாம்சஹா பாமேற் பொருத்தங்கொண்டும், வல்லானவுலியா கிருபைகொண்டும் வலியஹகீகத்து மாலே சொன்னேன், எல்லாருமிதைக் கேட்டறிந் தால் இறையோன் றஹ்மத்து உண்டாகுமே.

ஹக்குகல்க்குக்குப் பொருளாவது ஹக்குமெய்யாகும் கல்கு பொய்யாம், ஹக்குகல்க்கு தாத்தும் சிபாத்தும் கல்க்குகானலைப் பேரலேயாமே. 1

தாத்து ஸிபாத்துக்கும் உவமையறி தாத்துஹயாத்து ஸிபாத்து மவுத்தாம், ஹயாத்துமவுத்துக் தானென்றே யாகும் ஹகீகத்தில் மவுத்தில்லையென்றார். 2

மவுத்துஹயாத்துக்கு மஃனவறி வரிசைநபியுல்லா சொற்படிக்கு, மவுத்துஹகீகத்தில் மறதியாகு மவுலாதிக்றுதான் ஹயாத்தாகுமே. 3

திக்று அகமியத்தில் ஹயாத்து திக்றுசெய்தவர் ஹயாத்தானவர், திக்றில்லாதவர் மவுத்தானவர் தினமும் நினைத்தவர் ஒலியாகுமே. 4

அறியுங்கள்திக்று அகமியத்தை அல்லாவின்றியே யுள்ளதெல்லாம், மறந்துவிடவேணு முனையுள்பட மறைவானது உனக்கானதாலே. 5

தன்னைமறப்பது பனாவாகுமே தன்னைநினைப்பது பகாவாகுமே, தன்னையறிந்தவன் நாயன்றன்னை யறிவானெனநபி சாற்றினாரே. 6

தானென்றது றூஹு அதிலேநின்றும் தனியோன் ஸிபாத்துகள், வெளியானதால் பாணியானவ ரதுகளைத்தான் படைத்தோனளவிலே சேர்ப்பார்களே. 7

இரவலுடமை நம்மிடத்தி லெப்போகெட்ட போதைக்குமிருக்கவேணும், ஒருவனதை வழக்காடினுக்கால் உடையோனுக்கவன் எதிரியாமே. 8

ஏழுஸிபத்துக்கும் வகையாவது இல்முசீவன் நாட்டந்தத்துவம் கேள்விபார்வை பேச்சிவைகளேழுந் கிருபையுடையோனிற் சேர்ப்பீர்களே. 9

பேணவேணும் நம்மிற்சாராமல் பெரியோரைப் போலே நடக்கவேணும், பேணிநடந்தார்க ளவுலியாக்கள் பேறுமிகுதமாய்ப் பெற்றுக்கொண்டார். 10

சேர்த்தஸிபத்தேழு மாண்டோனளவில் சேர்ப்பது தௌஹிது ஸிபாத்து, சேர்ப்பதுநம்மி லிணையெனவும் ஸிறுக்கில் நபியென்றும் சொன்னார்களே. 11

உள்ளமைச்செயல் ரண்டுபட்டால் உன்னையிணையென்றுசொல்லப்படும், உள்ளமையிலும் செயல்களிலும் ஒன்றாய்க் காண்பது தௌஹீதாமே. 12

உன்னையவனுடன் சண்டையானால் ஒருபோதும் தௌகீதுண்டாகாதே, தன்னையறியாத பேர்கள் தன்தன் நாயன் றன்னையுமறிய மாட்டார். (13)

தன்னையில்லை யென்றறிந்தோர்கள் தன் நாயன் பாக்கியென்றறிந்துகொள்வார், தன்னையேலாதோனென் றறிந்தோர் தன் நாயன் காதிறெனவறிவார். (14)

இல்லல்லாஹு-டன் லாஇலாஹ இதுபாத்தும் நபீயுமானதால் அல்லா அவனுண்டும் வேறொன்றில்லை அதுதானபியுடன் இதுபாத்துமே. (15)

எல்லாஹூவிலு மிதைப்பேணினால் இருணீக்கிக்கல்பு வொளிவானதின், அல்லாஹகீகத்தும வெளியாகுமே ஆண்டோன்றன்னையுமறிந்து கொள்வாய். (16)

ஹக்குகல்க்குக்கு முதலாவது கடலும் அலையையும் போலேயாகும், ஹகீகத்தில் அலைகடலேயாகும் கடலுமலையும் வேறுகுறிப்பதில்லை. (17)

பனியுந்தண்ணீரும் போலேயாகும் பணியும் பொன்னையும் போலேயாகும், பணியான கல்க்கில் ஹகீகத்துதான் படைத்தோனாகுமென்றறிந்துகொள்வாய். (18)

ஹக்குடனொரு வஸ்துமில்லைக் கல்க்கின் ஹகீகத்து ஹக்கானதால், ஹக்கு அசுமாவின் மஉஹூறானகல்கு அநேக மூண்டாகினுமே. (19)

கல்குக்குச் செயலில்லையென்று கண்டோரெல்லோரும் பசுவு பெற்றார், கல்குக்கு ஹயாத்தில்லையென்று கண்டோரெல்லோருங் காமிலானார். (20)

கல்குகுதுறத்தில் உஹதத்தைத்தான் காண்பார் காமிலீனனதினால், கல்க்குதானில்லை யென்றோரெல்லாம் ஹக்கனளவிலே வாசிலானர். (21)

அல்லா நீ வெளியாயிருக்க அஃபாயில் மறைவாய் எப்படி எல்லாசமுகம் உன்சமுகம், ஆகவிருக்க எப்படியொளிப்பாய் எல்லா வஸ்திலு முன்னையறிய இறையேஉன்னைக்கண்டேன் வெளியானதால் கல்லாதே ஒருவஸ்தாயிலும் காணாததில்லை யெனவுரைத்தார். (22)

எல்லா வஸ்துக்குந் துவக்கமவன் ஒடுக்கம் வெளியானேன் மறைவுமிறை வல்லான் வெளியானல் வேறேன்றில்லை! மறைந்தால் எல்லாம் வேறாய்க்காணுமே, வல்லோன் மறைந்திருக்காதவர்க்கு வஸ்துவடங்கலு மறைந்ததல்ல, எல்லாவகை தொகையறிந்தோன வன் இஸ்முசிபாத்தி லொன்றானவனே. (23)

அவனுக்கு

காட்டத்துக் கப்பாலாயிருக்க காணுனை காடுவது எப்படி தேட்டங்கொண்டு தான் தூரப்பட்டால் தேடுவது உன்னையெப்படியாம், நோட்டத்திலென்னைக் காணவவன் மூடுகினல் நோக்குவது எப்படி தேட்டமுன்னளவிற் சேர்க்காது செய்காட்டமூன்னிலே முந்தாதே.

காட்டமீயாகும் காடுறோனும் காடப்பட்டோனும் நீயேயாகும், தேட்டம் நீயாகும் தேடுறோனும் தேடப்பட்டோனும் நீயேயாகும், வாட்டம் நீயாகும் மகிழ்ச்சிகளும் வணக்கங்கள்தானும் நீயேயாகும் ஆட்டம் நீயாகும் ஆடுதலும்அடங்கலுனையன்றி வேறில்லையே.25

ஹாமிதுமகுமூதும் நீயேகாலிக்கு மகுலூக்கும் நீயேஆமிதும் மகுபூதும் நீயே ஆசிக்கு மசுகூக்கும் நீயே, வாசிலுமவுசூலும் நீயே வாஜிது மவுஜூதும் நீயே, ஆரிபுமகுறூபும் நீயே, றாயிமறுயியும் நீயாகுமே. (26)

அல்லாயிறக்கிய இகுலாசினில் அவனுமின் சானுமொன்று மென சொல்லியிருக்கிற சொல்லைப்பார்க்கில் சிர்றுலின் ஸான்தான வனுமென்று, எல்லார்க்கு மிதுவெளியாகுமே இன்ஸான் காமிலில் வந்ததனல் சொல்லாத சொல்லை சொன்னபேர்க்கு சுவர்க்கந்தாரமென் றருளிச் செய்தார். (27)

அல்லாவென்றபே ரவன்றனக்கு அகுலமானபே ரானதுபோல் வல்லோன் குறுஆனி லவன் றசூலுக்கு வகுத்தான் அப்திகியென்று சொல்லி வல்லவொருபேரு மிதுக்கதிகமில்லை வருமானலதைச்சொல்லுவான், எல்லோர்க்கு மறிவிதுபோதுமே இறையோன் தானப்து அப்துறப்பே. (28)

அடிமையுள்ளமை யாண்டவனு யிருக்கிலுமப்து றப்பாகாது, கடினமாகவே வெளியாகியும் ஹக்கு ஒருபோது மப்தாகாதே இருமையென்றில்லை அப்துறப்புக் கிணங்கியபாதத்துச் செய்துவந்தான்

உரிமையுடையோனே யுதவிசெய்வாய் உன்னைக் கொண்டுதான் காரியமே. 29

இசுமுல் அகுலமையறிந்தவர்க்கு எல்லாக் கருமமுமுண்டாகுமே இசுமுல் அகலமையறியாதவன் இறையை யறியாத ஜாகிலாமே

ஹகீக்கத்து மாலை முற்றிற்று.

மஃரிபத்து மாலை.

அல்லாஹ் சுபுஹானஹு த்தஆலா அவனுக்கே எல்லாப் புகழ்ச்சியுமாம், சொல்லால் சலவாத்தும் சொல்சலாமும் துய்யமுஹம்மது நபி மீதிலே, நல்லார்கிளையார்க்கும் தோழமார்க்கும் நாயன் பொருத்தமெப்போதுமுண்டாம், வல்லோனே யுன்னையறியும் வழிவகையை யுரைக்கவே யருள்செய்வாயே. 1

சேர்த்தேன் சரீஅத்துத் தரீகத்துவும் செவ்வுற்ற பாதையறிய வேண்டி, ஏத்தமாகிய திக்ருவது எல்லாரும் சொல்லப்பட்டதுதான் மாற்றமானதை நினைத்தவர்கள் மவுலாவை யறியாதவர்கள், ஊற றைப் பிணமான நரகந்திலே ஊழிகாலமும் கிடப்பார்களே. 2

அறிவுகளுக்கெல்லாக் தலையறிவாம் அல்லாதன்னைத் தானறிகிறது பிரிவாமதில் மூன்றுவகை யுண்டதிற்பேணு மதிலொன்றும், ஒப்பாக்குதல் செறிசேர்தன் சிஹாதுவமையில்லான், கிரப்பான தோண்டுங்கூடிச் சிறியார் பெரியாரு மறியவேணுஞ் சேர அறியாதார் மூடராமே. 3

ஒப்பும் உவமைதான் ஒன்றென்றதே உடையோனுக் கதுதசு பீஹாகும்; தப்பு அறிவதாமானதினால் தள்ளிதன்சிஹா செய்ய வேணும், செப்புமுவைதானில்லை யென்றல் சிறப்பான நாயன்தன் சிஹாகும், ஒப்பாம் தன்சிஹில் கலப்பற்றது ஒன்றுமிரண்டையும் சேர்த்ததிதே. 4

அகமியத்திலே அவ்வலிலே அவனுக்கு ஒப்புயில்லை யென்றல் உகமையெனும் ஒப்பாம், தகுபீஹது உள்ளமைவெளியான புறம் மகிமை பெறுவார்கள், ரெண்டையுந்தான் மயக்கமில்லாம லறிந்தவர்

கள் சுகமா யிருப்பார்கள் சுவர்க்கத்திலே துய்யஅமல் செய்தோ ரென்றறிவாய். 5

தன்னையறிந்தவன் நாயன்றன்னை அறிவானென நபிதன் சொல்லைக்கேள், உன்னை உன்னிலே ஆராயுதல் உனக்கு அதுபோது முன்னை யறிய, முன்னுமவனுட னொன்றுமில்லை முன்போலே பின்னுமென் றறிவாய், அன்னை பிதாவினுங் கிருபையான ஆண்டோனுக்கொன்று மிணையில்லையே. 6

எல்லாமவனென்று விறையோனுக்கு எல்லாவஸ்துவு மொப்பா குமே, அல்லா அல்லாது வேறேயொன்றும் அறவே யில்லையே அகமியத்தில், வல்லாலொருத்தருந் தன்னைக்கண்டால் வலிய காபிர மானதனால், நல்லாரெல்லாருந் தன்னைப்பனா வாக்கிநல்லமல் செய்வார்களே. 7

அல்லாவை மிகவறிந்தவர்தான் அவன் சிபாத்தையும் மிகவறிந் தோர், வல்லான் சிபாத்துகள் மிகுதமுண்டு வலுப்பமுளஸிபத்தே மூண்டுகேள், எல்லார்க்கு மதையிரவலாக இறையோன் கொடுத்ததா வினையில்லையே, வல்லா ரொருத்தனுந் தனக்குண்டென்றோன் வலிய நாயனை அறியமாட்டான். 8

இரவல் வாங்கின பேர்களதை எப்படியவர்குடைய தென்பார், மரபுகளில்லா மறைவில்லாமல் மன்னோனுக்கிணை யில்லையென்றான், இரவுபகலெல்லாம் வணங்கினாலும் இணைவைத் தோனிறை தனை யறியான், குருவினுபதேசந்தனை மறந்தகுணக்கேடன் சொர்க்கம் புகுதமாட்டான். 9

எழ்சிபத்தறி ஹயாத்து மில்மும் இருதத்துடனே தான் குது ரத்துவும், கேள்விபார்வை பேச்சிவை யேழையும் கேளாதோன் ஹக்குதனையறியான், பாழாக்துனியாவில் பிறந்து வந்தான் பலன் பேறானதை யறியாதவன், நாளை கியாமத்து நாளையிலே நல்லஅமல் செய்தோர் நயம் பெறுவார். 10

அடிமையிணையல்ல ஆண்டோனுக்கு அவனிவனென்றபதுக்கு மில்லை, கொடுமை அடிமைக்கு நானென்பது குதாவை யொருபோது மறியமாட்டான், மிடிமைகுபிராக முடுகுமென்று மிடிமை நிரம்பினா லடிமையென்றும், திடனாக நபிஹதீதுதனில் திருவுளமானதை யறிவாய். 11

அல்லா அளவிலே ஹாஜத்தானேன் அவன்றானவனுர்குத் தனதடிமை, வல்லயாதொரு வஸ்துவையும் வணங்கினேனவன டிமையல்ல, வல்லானுக்கடிமையானவர் வணக்கமவனுக்கே தன தாக்குவார், கல்லாதிருந்தாலுங் காதுகொண்டு ஹதீதுகளைக்கேட்டு அமல் செய்வாரே. 12

அல்லாவை யறிந்தோர்களுக்கு அடையாளமுண்டா மது தனைக்கேள், நல்லா அமல்செய்தா லதற்குக்கூலி நாடவுமாட்டார் அமலைக்காணூர், எல்லாநல்கிலு மிறையுஜூதே யல்லாது வேறே யிணையைக்காணூர், பொல்லாக் குணங்களைத் தவிர்த்திடுவார் புக ழானநல்லகுணங் கொள்வாரே. 13

அல்லாவை யறிந்தோர்களெல்லாம் அமலில் பேணுதலொழிய மாட்டார், சொல்லா லகமியமலா கிறுக்கு சோருபடு மாகிலுறுதி கொள்ளார், வல்லான் பறக்கத்தை மிகக்கொடுத்தால் வப்பரைப் போலே ஹறுமைச்செய்யார், நல்லார் அப்துல்லாஹில்யாபிஈ நவின் றுரிதுகளை யிறுஷாதிலே. 14

ஒருமைத் தௌஹீதில்லாதவர்கள் ஒருபோதும் ஹக்கையறிய மாட்டார், இருமையினையெனுஞ் ஷிறுக்குள்ளவன் இறையைத் தௌஹீது செய்யமாட்டான், பெருமைஆர்ப் பலவுள்ளாறுகில் பெரியநாயனை யறியானென்று, அருமை யுரிமையும் கருணையுள்ள ஆலநபிஹதீ தருளிச்செய்தார். 15

துவக்கமு மவனேடுக்க மவன்துய்ய வெளியானேன் மறைவா னவன், எவர்க்குமிது போதுமிது கொண்டுதான் இறையைப் பெரி யோர்க ளறிந்துகொண்டார், சுவர்க்கவாதிக ளெல்லோருந்தான் துலக்கமாய் ஹக்கை யறிந்திருப்பார், அவர்க்கு அடையாளம் நல்ல மலை ஆர்ப்புமட்டுக்கும் ஒழியமாட்டார். 16

நாயனுக்கொரு யிணையுமில்லை நாயன்செயலெல்லாம் நற்செய லாம், தூயோனவனுக்குத் துணையுமில்லை சொல்லவேறொரு ரூப மில்லை, காயமுமில்லை கல்க்கைப்போலே கண்டிப்புமில்லை கோல மில்லை, பேயனைப்போலே யாகாமலே பேணியமல் செய்தோர் பலன் பெறுவார். 17

நல்ல அமல்செய் நல்லுதவி நாயன் செய்ததாலவன் பரமே, பொல்லா அமல்செய்து அவனில் சேர்த்தால் பொல்லா தானவன்

அதபுகெட்டோன், நல்லாரது கலைநம்மிற் சேர்ப்பார் நாயனுட பரமாயினுமாம், வல்ல ஒருத்தனும் வணக்கம் விட்டோன் வன்னி நரகத்தில் புகுதுவானே 18

ஓர்மைத் தௌஹீது செய்தவர்கள் உள்ள தௌஹீதாயிருக்கு மாகில், நேர்மையாகவே நடப்பார்களே நெறியாய்ச் செவ்வுற் றேயிருப்பார்களே, கூர்மையாகிய அக்கலுள்ளவர் குதாவையொரு போதும் மறக்கமாட்டார், தீர்மானமாக அறிந்தவர்கள் தெளிந்து அமல் செய்வா ரென்றறிவாய். 19

எல்லாச்செயலையு மவன் செயலென் றெண்ணுவார் பொல்லாச் செயலைச்செய்யார், வல்லாலொருத்தரும் வணக்கம்விட்டால் வம்பன்மேல் ஹத்தை நிறுத்தாட்டுவார், நல்லாரமல் நாயன் பெருமையென்பார் நாம்செய்தோமெனக் காணமாட்டார், பொல்லாச் செயல்களைச் செய்யமாட்டார் பொருந்தவுமாட்டார் மூமினானோர். 20

வழிகெட்டபேர்கள் தௌஹீதைநேர் வழியிலானவர் செய்யமாட்டார், பழிகள்பிழைகளைச் செய்துபின்னே பறைவார் செயல் நமக்கில்லையென்றும், மொழிவார்நசாருவின் ஞானியானோர் மொழிந்ததுபோலேயவர் மொழிவார், தெளிவான பேர்கள் பாவங்களைத் தவிர்ந்து நல்லமல் செய்வார்களே. 21

உள்ளமையிலே யூன்றுதலாய் உள்ள அமல்களை யொழித்த பேர்கள், கள்ளக்காபி ரானவனைக்காண கடிசானகாபிறாயிருக்கும், வள்ளலிறசூலின் சறகின்படி வணங்கினோர் நேருவழியிலானோர், கள்ள இபுலீசு கலவிலானோர் காபிர்முனபிக்கும் ஸிந்தீருமே. 22

ஈமானும் வழிபாடுமுள்ளோர் இசுலாமான பேராயிருக்கும், ஈமானான பேரிதைப்பேணினால் சிறப்பாயிருப்பார்களிருபதியில், கோமான் றசூல் சின்னத்தைத் தொடர்ந்தோர் குதாயைப்பிரிசம் வைத்தவரானதால், ஆமான பாதையில் நடப்பார் ஆகாத வழியைத் தவிர்வார். 23

தன்னையறிகிற வகையாவது தானென்றது மூன்று வகையுண்டு கேள், முன்னே நாயிலயில் வெளியானது முந்தின நபுசென்றறிவாய், பின்னே நாம் ஆலம் அறுவாஹிலே பிறந்தது ரெண்டாம் நபுசானது, அன்னைபிதாவுட அகமிருந்து வெளியில் வந்தது மூன்றுவதே. 24

அன்னை பிதாவிலுங் கிருபையான ஆண்டோன் சிபாத்துக ளனேக முண்டும், முன்னே அல்லாவை யறிகிறது முக்திமார்க்கத்தி லென்றி றசூல், தன்னை யறிந்தவனுயனையும் தானேயறிவா னென்றே ஹதீதில், சொன்னதைப் பாக்கி லிசுலாமிலே சொல்லுங் கலிமாத் தான் முக்தினஃதே. 25

அல்லா தனக்குள்ள சிபத்துகளை அறிந்தோரவன்றனை மிக வறிவார். எல்லாரு மிதையறியவிதி எத்தமுளசிபாத் திருப துண்டும், இல்லாத சிபாத்திருபதுண்டும் இதிலொன்றுண் டென் ருல் குபிர் விளையும், கல்லா ஆமான் சிபாத்துமுண்டும் காயன் செய லெல்லாம் நற்செயலே. 26

எல்லா சிபத்தையும் இமாம் கஸ்ஸஃலி இஹ்யா உலூமுத்தீன் கிதாபில் சேர்த்தார், அல்லாமத்துமா முகயினலெப்பை ஆலிமிது களை வெளிச்சமாக, நல்லோர் அல்லாவை யறியவேண்டி நவமாயுரை செய்தார் தமிழ் பாஷையால், கல்லாதகல்வி கற்றுணர்த்தும் ஹக்கை யறியா தான் ஜாகிலாவான். 27

அல்லா தனக்குள்ள சிபத்துகள் தான் அனேக முண்டதி லறிய விதி, எல்லாருமிதை யறியவேணும் இறையை யறிவார்க ளிதையறிந்தோர், சொல்லால் வாஜிபு உண்டென்பதும் சொல்லால் முஸ்தகீலில்லை யென்றும், வல்லான் சிபத்துக ளெல்லாத்திலும் வகையாய்த் தெரிந்தவர் வழி பிழைப்பார். 28

சீவனறிவு காட்டக்தத்துவம் செவியின்றிக் கேள்வி பார்வை பேச்சு, ஈவதிது எழும் அடியார்கட்கு இரவலுடைமையாம் அமானமுமாம், சாவமுன்னமே யவனளவில் சாட்டினு ரெல்லாம் வாசிலானர், ஆவிவிடும் போது அனைவருந்தான் அல்லா அளவிலே சாட்டுவாரே. 29

ஷரீஅத்தை விட்ட பேர்களுக்குத் தரீக்கத்தொருபோது முண்டாகாது, தரீக்கத்தை விட்ட பேர்க ளெல்லாம் சரிப்பட்ட ஹகீகத்தை யறியார், அரியமகரிபத் துண்டாகாது அதுமூன்றும் விட்ட பேர்களுக்குச், சரியாக நாலையு முடையோர் சமதான நாய னளவிற் சேர்வரர். 30

மஃரிபத்து மாலை முற்றிற்று.

தௌஹீது மாலை.

தவுஹீதின் மகுனவை யரிதனியோ ளொருத்த னென்றறி
கிறது தவுஹீதின் பறுனுள்ளமையை தனிப்பது செயல்சிபத்
திசுமை தவுஹீதின் சறுத்தறி நாயன் தான் தனியோனல்லாது
இல்லை யென்றும் தவுஹீதின் கலிமாவையறி தையிபல்லாமல்
வேறில்லையே. 1

அல்லாவைத் தவுஹீது செய்கிறதில் அதிலும் ரெண்டுண்டு
மொன்றுவது, எல்லாரும் செய்யும் தவுஹீகது இறையுண்டென்பதா
மிரண்டாவது, நல்லானவுலியாத் தௌஹீதது நாயனல்லாது
வேறில்லையாம், வல்ல வொருத்தன் வேறுண்டென்றவன் வலிய
காபிரு யிருக்குமென்றார். 2

இணையில்லை யிருபதி யிலையும் இல்ராஹ— அவனுக விருக்கு
மென்றும், துணையில்லை யென்றும் வேதத்திலே துய்யோனவன்
சொன்னதாலிணையை, அணைய வொட்டாம லன்பியாக்கள் அவுலி
யாக்க ளெல்லாருங் கத்தார், குணணையுடைய மூமீன்க ளெல்லாம்
குதாய்க்கு இணையொன்று மில்லையென்றார். 3

உள்ளமையிலும் சிபத்திலேயும் ஒன்றை யல்லாமல் வேறில்
லையே, கள்ளஞானிகள் களவுசின செய்து காவிக்கு செயலே
யென்பார், உள்ள தௌஹீதா யிருக்குமானல் ஒருபோது மதைச்
செய்ய மாட்டார், வள்ள லிறசூலின் ஷரீஅத்தை வலுப்பப்
படுத்தினோர் வலுப்பமானர். 4

மூசுலிமாகிய பேர்களெல்லாம் மூன்றேனை யோர்மைப்படுத்தி
னோர்கள், கசுலாய்ச் சடைவாக அமலைவிட்டோன் காலிக்கையறி
யாத ஜாகில் இசுக்குவுடைய பாசுக்கு அவன்தான்போனன் பாவங்
களடங்கலையும், இசுலாமீமானும் மஃரிபத்தும் இதுமூன்றுங் தவு
கிதுடையவர்க்கே. 5

வேறில்லையென்று சொல்லிக்கொண்டு விகற்பமாகவே நடக்கிற
வன் கூறுகெட்டவன் குணங்கெட்டவன் குதாயையறியாத ஜாகில
வன், தாறுமாருக நடக்கிறவன் தர்க்கம் சண்டைகள் தொடுக்கிற

வன், நாறு அவனுக்கா யிருக்குமென்று நபியுல்லா ஹதீதில் மொழிந்தார். 6

வணக்கத்துக்கெல்லாம் அசலாவது வலியோனை தௌஹீது செய்கிறது, பிணக்கங்களில்லை யோர்மை பெற்ற பெரியோர்க்குத் தௌஹீத் செய்கிறதால், இணக்கமாகவே இருப்பார்களே இறை யைத் தௌஹீது செய்தபேர்கள், குணக்கங்கள் கோபமொன்று மில்லை குதாயைத் தௌஹீது செய்தவர்க்கே. 7

தொழுகைவிட்டவன் தௌஹீதைத்தான் துய்யோன் கபூல் செய்யானென்று சொல்லி, பழுதுவருத்தாத இபுனப்பாசு பகர்ந்தா ரதுதனைக் கித்தாபுதன்னில், தொழுகை நோன்பு ஸக்காத்து ஹஜ்ஜு தொடுக்காதோனமல் கபூலாகாது, மூழுதுமெடுத்தவனமல் கபூலாம் முகுலிசா யிருந்தோர் தமக்கே. 8

செயலைத் தௌஹீது செய்கிறதில் செபரியாக்கள் சொல்செயல் களெல்லாம், செயலையுடைய ஷைத்தான் சொல்லும்போல் கிலாபாக நாயன் செயலேயென்பார், மயலான கூட்டம் கத்ரிய்யா சொல் மவுலா செயலில்லை நமக்கே யென்பார், நயம்பெற்ற அருல்சுன்னத்து சொல் நாயன் செயலும் நம்செயலுமென்பார். 9

நாயன் மட்டுக்கும் செய்வதானல் நரகமொருத்தரும் புகுத மாட்டார், தூயன்செயலில்லை யென்றுகண்டால் துணையில்லா தில்லையென்று கண்டான். மாயமவனென்றும் நாமுமென்றும் மயங்காமலமல் செய்யவேணும், பேயனைப்போலே யாகாமலே பெரியோர்கள் குணம்கொள்வீர்களே. 10

தௌஹீது மாலை முற்றிற்று.

சிர்றுமாலை.

சிர்றுல் இன்ஸானுர் ஹகீகத்துஆர் சிர்றுலாகியார் முரீதீன் களே சிர்றுல் திக்றென்ன ஹகீகத்தென்ன சிர்றுஸலாத்தென்ன முசல்லீன்களே, சிர்றுல் சக்காத்தென்ன ஹகீகத்தென்ன சிர்று சவுமென்ன சாயிம்களே, சிர்றுல் ஹஜ்ஜென்ன ஹகீகத்தென்ன சிர்றையுடையோரே கேட்டறிவீர். 1

தன்னை யறிந்தவன் நாயன் தன்னை அறிந்தா லென்றதில் தானேன்றதால், முன்னே மவுத்தாகச் சொன்னதிலே மூத்திமவுத் தாவதெப்படியோ, முன்னவன் குணம் மூன்னூறென்று மொழிந்ததி லந்தக் குணங்களென்ன, அன்னை பிதாவிலுங் கிருபையான ஆண் டோன் குணங்கொண்டு குணங்கொள்வீரே. 2

இஸ்முல் அகுலமையறியாதவன் இறையையறியாத ஜாகிலவன் அஸ்மாவிலது அகுலமென்று அறிந்து எல்லோரும் எகின்கொள் ளுங்கள், இஸ்மிலதுபோலே யில்லையது இறுஷாதுசெய்த செய்கி டங்கேள், நிசங்கொண்டு அதைக்கொடு வந்தோர்க்கு நினைத்தகாரி யம் கபூலாகுமே. 3

சிர்றுல் உலுவென்ன உறுப்புகளில் சிர்றையறியாத முசல்லீன் களே, சிர்றில்முகமென்ன முகங்கழுவ சிர்றில் கையென்ன கை கழுவ, சிர்றில் தலையென்ன மகுசுசெய்ய சிர்றில் காலென்ன கால் கழுவ, சிர்றை யறியாமல் தொழுதவர்க்கு சிறப்புக் கியாமத்திலில்லை யென்றார். 4

சிர்றுறுபூபிய்யா மறைக்கச்சொல்லி சிறப்பான நபிசொன்ன தனால், சிர்றுக ளொன்றுஞ் சொல்லவில்லை. சிர்றுநு புவ்வத்து மறைக்கச் சொன்னார், சிர்றை பரத்தினால் குபிராமென்று செய்யி துர் றஸூல் மொழிந்ததனால், சிர்றையுடையோர்பால் சென்று சிர்றை சிர்றாகக் கேட்டு அறிந்துகொள்வீர். 5

ஹறாமாயிருக்கிற பார்வையிலே ஹலாலானதுவென்ன ஹறாமு மென்ன, சிறாத்துல் முஸ்தகீம் பாலமென்ன சிர்றுசுன்னுகுமத்து மென்ன, குர்ஆன் படைக்கப் படாதென்ன படைத்த படைப் பென்ன குர்ஆனிலே, இறாதத்தில்லாத முறாதீன்களே கேட்டே யிதுகளை யறிவீர்களே. 6

அறிவுக்குத்தகுரீ பென்னாசொல் அறிவின்தாயென்ன தகப்ப னென்ன, அறிவில் பிரயோஜன முள்ளதென்ன அறிவுகளில் மேலாம் பானதென்ன, அறிவுக்குஒஸீர் மந்திரியார் அறிவுகளி லேத்தமான தென்ன, அறிவிலே திட்டமான தென்ன அறிவாள ரைக் கேட்டு அறிந்துக் கொள்வீர். 7

பாவங்களுக்கெல்லாந் தாய்களென்ன பாவத்தில் பொறுக்காத தென்ன, பாவங்களில் நாயன் பொறுப்பதென்ன பாலத்தில் விடப்

படாததென்ன, காவினல்வரு மாபத்தென்ன நாலுவேதத்தில் தெரிந்ததென்ன, ஏவல்விலகற்கு வழிப்பட்டாலும் எல்லாத்துக்கு மசல் கேட்டறிவீர். 8

வணக்கங்களிலெல்லாம் பெரியதென்ன வணக்கத்தை தட்டுங் குணங்களென்ன, வணக்கத்தைப்பத்து பங்குவைத்து ஒன்பது மொன்றில் வந்ததைச்சொல், வணக்கங்கபூலாக ஷறுத்தையென்ன வணக்கத்துக்கெல்லாம் றூகு என்ன, வணக்கத்தின் முரூத் மகுன வென்ன வலுப்பமானோரைக் கேட்டறிவீர். 9

முஷாஹதாவிலே வகையெத்தனை முரூக்கபாவிலே வகையெத்தனை, முஷாஹதாவிலே வகையெத்தனை முனபிக்கீனன மூமீன் களார், முஷாயிகுமாரில் வகையெத்தனை முரீதுபோல்கொத்த ஷெய் குமாரார், இஷாறத்தில்சில சுவால்ஜவாபு இதுஷரீ அத்தின் மாலை யிலாம். 10

விருதை யுடையோனில் மலகூனென்றும் விருதைவிட்டவன் மல்கூனென்லும், திருவுளமானர்கள் ஹதீதில் தீனையுடையோரி ருவருமார், சிறுக்கினில் மறைவானதென்ன சிபத்தை யறியாதோர் முசுலிமோ சொல், சிர்றுமாலையில் வந்ததெல்லாம் சிர்றையறிந் தோரைக் கேட்டறிவீர். 11

ஈமானுடனே மவுத்தாகவேண்டி என்ன அமல்செய்ய வேணும் சொல்லு, கோமானுடைய லிகாவைப் பெற்று கொள்ள அமல்சாலி கென்னசொல்லு, ஈமானுனோரார் பக்கீருரு சொல் சின்னமான துன்யா வென்னசொல், ஈமானில்காமிலை யறிந்தால் இறையோனளவிலே வாசிலாவீர். 12

இல்முக்குத்தலை யென்னசொல்லு இல்மின் தீர்மானமென்ன சொல்லு, இல்முக்குத்தெளி வென்ன சொல்லு இறைக்கு அமல் செய்தால் தெளிவென்ன சொல்லு, இல்மில் இல்மென்ன அறிந்து சொல்லு இல்மில்ஜகுலென்ன அறிந்துச்சொல்லு, இல்மின்படி நடக்காதவனும் இபுலீசும் சரியென மொழிந்தார். 13

அன்பியாவுக்குத் துவக்கமென்ன அவுலியாவுக்கு ஒடுக்க மென்ன, நம்பின பேர்க்குத் துவக்கமாகும் நல்லநபிமார்க்கு ஒடுக்க மாகும், வம்பில் வணக்கத்தை விட்டவர்கன் வலியஓலியுடன் சேர

மாட்டார், செம்பில் கறைபோனால் தங்கமாகும் சேர்ந்த பெரி
யோரும் இதுபோலாமே. 14

அல்லாநாடின படிக்குமவன் ஏவினபடியே நடக்கவேண்டும், கல்லார் சொல்லுவார் நமக்குசூது செயலொன்று மில்லை யென்றுங் காண்பார், எல்லாமிறைக் குதுறத்தைக் கொண்டும் அடியார் செயல் கொண்டுக் தானடக்கும், வல்லான் செயல்கொண்டு மட்டுமானல்
வல்லஒருத்தரும் நரகம்புகார். 15

சிர்று மாலை முற்றிற்று.

திக்று மாலை

திக்றும் தாக்கிறும் மதுக்கூறவன் திக்றை யுடையோனுக்கே புகழாம், திக்றையிறக்கி வைக்கப்பட்டவர்பேரில் தினமிறை சலவாத்துண்டாம், திக்று செய்கிற ஆல்களசுகாபிக்குத்தினம் பொருத்தமுண்டாம், திக்றுமாலையை யுரைசெய்யவும் திக்று செய்யவு முதவி
செய்வாய். 1

திக்றுமெத்தவும் பெரியதென்று திக்றிலிறையவன் சொன்னதற்கு, திக்று தொழுகையில் பெரியதென்று தெளிவான இபுன்றபீ சொன்னார், திக்று செய்தவன் வழிப்பட்டவன் திக்றில்லாஅமல் குறைந்தாலுமாம், திக்றில்லாதவன் மாறு செய்தோன் திக்றன்றறி
யாமல் மிகுந்தாலுமே. 2

திக்றுபிக்றைப்போல் வணக்கமில்லை திக்றேத்தம் பீசபீலக் காண, திக்றுக்காய்வேண்டித் தொழுகையைநீர் தினமும் எடுக்க வென்றிறையோன் சொன்னான், திக்றைமிகுதமாய்ச் செய்யச் சொல்லி செப்பினானிறை குறு ஆனிலே, திக்றுதாயிமாய்ச் செய்வது
தான் திக்றுமிகுதமாய்ச் செய்வதென்றார். 3

திக்றிலே ரெண்டுவகையுண்டுகேள் திக்றுஜலி யென்றும் கபியி யென்றும், திக்றுஜல்லிதான் வெளிரங்கமாய்த் தீனோர்கள் சொல்லப் பட்ட சொல்லாம், திக்றுகபி கல்புகொண்டு அதைத்திக்றுசெய்வது மகுனவுடன், திக்றுகபியேத்தமென்றிறசூல் செப்பினாரும் மத்தனை
வர்க்குமே. 4

திக்றுஜல்லியிலே முகத்தாட்சனை திக்றுகபியிலே யதுவராது திக்றுகபியாகச் செய்யவேணும் திக்றுகபியேத்த மென்றதனால், திக்றிலே யெட்டுவகையுண்டதில்திக்றுகளிலேத்தம் தையிபாகும், திக்று அல்லாஹு அதிலுமேத்தம் திக்றுஹூ வெல்லாத்திலுமேத்தமே 5

திக்றில் வகையேழு தகுலீலொன்று இல்லல்லாஹு அல்லா ஹூஹக்கு, திக்றிலே ஹையுல்கை யூமாரும் திக்று கஃஹாறுஎழா வதாம், திக்று எழூபோல் கபுசு எழு மறுத்தபாஎழு திக்றுவகை திக்று செய்தார்கள் சயிர்கலூக்கில் சுதரியுமதைப்பார்த்து அறிந் துக்கொள்வாய். 6

திக்றுகளி லேழுதிக்றுதான் திக்றுகபுசுடன் திக்றுகல்பு, திக்று அகுலுடன் திக்றுறூகும் திக்றுமஃரிபா திக்றுசிர்றும், திக்றுவிசா னறிஹம் துக்தனுவும் திக்றுகபுசு தெண்டிப்புவருத்தம், திக்றுகல்பு தான் பயங்கரமும் திக்று அக்குல் சபுறுபொருத்தமுமே. 7

திக்றுறூகு உண்மைத்தெளிவும் திக்றுமஃரிபா தலைசாய்க்கு தல், திக்றுசிர்று சிர்றும்லிகாவும் திக்றுஎழுக்கும் வகையிதுவே, திக்றுசெய்வது ஈமானுக்கு அடையாளம் திக்று அமலிலேத்தம், திக்றுசெய்வது உவப்பவனை தினமும் வைத்ததற் கடையாளமாம். 8

திக்றை கோபமானா லவன்மேல் தினமும் கோபமானவ னென் றறி, திக்றுசெய்கிற நேரத்திலே சிறப்பானவனுட னவனேயென்றார்

திக்றுச்செய்யுங்கள் நார்ந்த திக்றுகவென் றிறசூல் செப்பினார் திக்றில், மறைவான திக்றுதான் திக்றில்மிக வேத்தமென்று சொன் னார், திக்றை மிகுதமாய்ச் செய்யுங்களென் றிறையோனுங் குறுஆ னிற் செப்பினான், திக்றுல் மிகவேத்தம் லாயிலாஹ இல்லல்லாஹு தானென மொழிந்தார் 10

திக்று ஹயாத்தென்றும் மறதிமவுத்தென்றுஞ் செப்பினார் தரீக் கத்திலே, திக்று ஜலியுதான் இகுருறென்றும் திக்றுகல்பிதான் கபீய தென்றும், திக்றுறூகிதான் இகுலா சென்றும் திக்றுசிர்றிதானெகீன மென்றும், திக்று இதுகாலும் திக்றில் ஷறுத்து திக்று செய்யுங்கள் பலன்பெறுவீர். 11

திக்று செய்கிற பாங்காவது நாக்கைவாய்த்தட்டில் சேர்க்கிறது, திக்றிலுதட்டுட னுதட்டைச் சேர்ப்பாய் பற்களைப் பற்களுடனே சேர்ப்பாய், திக்றில் மூச்சை நீ தடுத்துக்கொள்வாய் தொப்புளில்

சின்றும் மலசயெடுப்பாய், திக்றுச் செய்கிறனே மூளையின் பாகத் தளவிலே சேர்த்துவிப்பாய். 12

திக்று செய்கிற தாக்கிறே நீ திக்றை மூளையில் சேர்த்தையா னல், திக்றில் இலாஹைக் கொண்டுன்னுடைய வலதுபாகத்திற் சேர்த்துக் கொள்வாய், திக்றிலில்லல்லாஹுவைக் கொண்டு இடது பாகத்திலே நீ சேர்ப்பாய், திக்றுலிதுகொண்டு கல்பின் தசைக்கட்டி சிலதின்மேலடிப்பா யென்றார். 13

திக்றுச்செய்கிற நேரத்திலே திக்றுச் செய்கிறேன் சரீரத்திலே திக்றுச்செய்கிற குவ்வத்துக்கொண்ட தரும் சூடுந்திக்றில் வெளியாம் திக்றில் ரெண்டாவதைக்கொண்டு நீ யிடதுபாகத்திலேநீ சேர்ப்பாய் திக்றில் பின்னே நீ இலாஹி அக்தமஃ சூதியென்று திக்றுசெய் வாயே. 14

திக்றுவது லாயிலாஹவென்று மூச்சுப்புறப்பட்ட விடத்திற் செப்பு, திக்று இல்லல்லாஹு வென்றசொல் மூச்சுப்புகுதுகிறவிடத் திற்செப்பு, திக்றில்முறுக்க பாவாகிறது லாஅுன இல்லாஹுவை செய்வாய், திக்றிலெல்லா ஹாலிலு மிதைத்தான் முறுக்கபாச்செய்ய வேணுமெனறார். 15

திக்று மிகுதமாய்த் திக்றுச்செய்கிறது எண்ணங்கொண்டல்லத் தினஞ்செய்வதாம், திக்றில் மிகுதமாய்க் கல்புஹாலிருகத் திக்று செய்வதென்றறிவாய், திக்றில்மிகுத மெல்லாநேரமும் முறுக்கபா திக்றுநேமமாகும், திக்றுஎன்றதுன் கல்பைவிட்டுத் தினமுமறதி யைவிரட்டுவதே. 16

திக்றிலகமியத் திக்றுசெய்தவன் திக்றைவிட்டவன்மறைகிறது, திக்று செய்கிறேன் மறைகிறது மதுக்கூறைத் தெரிசிப்பதனுல், திக்றில் மிகுதமாய் மதுக்கூறைத்தான் திக்றுசெய்தவன் மறக்கா மலே, திக்று எந்தநேரமும்செய்த திக்றுநாவினல் கல்புகொண்டே.

திக்றுச் செய்தவன் வெளியில் துன்யாச் செயலைக்கொண்டு தான் பராக்காகிலும், திக்றுச் செய்கிறேன் பாத்தினிலே திக்று கொண்டு தான் பராக்காகிலும், திக்றிலிப்படித் திக்று செய் தோரை நாயன் எப்படி திக்றுசெய்தான், திக்றிலேயவ ராண்பிள்ளை கள் அவரைப் பராக்கொன்றும் வருத்தாதென்றான். 18

திக்ரிலேமூன்று ஹாவுகொண்டும் கல்புமறதியாய்த் திக்றுசெய் வதும், திக்ரிலே கல்பு ஹாஸிருக காவுகொண்டுதான் திக்றுசெய் வதும், திக்ரிலேகாவு மூழுங்கிப்போகும் திக்று கல்பிலே நிரம்பின தால் திக்று ரொண்டுக்கும் பத்தெழுநூறு திக்றுகல்பில் கணக் கில்லையே. 19

திக்றுசெய்துக்கோ உன்னுடைய றப்பைத்தெரிசனை மறந்த போதே, திக்றுச்செய்துக்கோ அவனல்லாத திக்றைவிட்டு நீ மறைந்த நேரம், திக்றில் மூபர்றதுான் மூக்கிப்போனு ரென்றதின் பொருள் நபி செப்பினர், திக்றில் அல்லாஹுடனே அவனல்லாத *செய்அுய் காணுரென்ருர். 20

திக்ரிலேநாலு வகையுண்டதில் திக்றுநாசூத்து தகுலீலதாம், திக்று மலக்கூத்தில் ரெண்டாவது இல்லல்லாவென்ற திக்ருகுமே, திக்று ஜம்றூத்தில் தாத்துடைய இசும்தான் அல்லாஹுவெனும் திக்ரும், திக்று லாஹூத்தில் திக்றுஷாரு திக்று ஹுவென்ற திக்ருகுமே. 21

திக்றுலிசானி நாசூத்து என்றும் திக்றில் திக்றுக்கல்பி மலக் கூத்தென்றும், திக்றுறூஹிதான் ஜபறூத்தென்றும் திக்று சிர்று தான் லாஹூத் தென்றும், திக்றுமகாம் தொண்ணூற்றென்ப துண்டும் இதுவெல்லாம் தல்வீனுடைய மகாம், திக்று மகாமில் நூற்றை நிரப்பும் மகாமுத்தம்கீன் அல்லாவென்றதே. 22

எல்லா செய்குமார்க்கும் இதுதான் சுலூக்கிலுமிது தகுலீக்கி லும், அல்லாவும் குல்அல்லாஹு என்று அஹமது நபி தமக்குச் சொன்னன், அல்லாவைத் தொட்டுங் கேட்டோருக்கு அல்லாஹு அஹதென்றும் சொன்னன், அல்லாஹுவென்ற இசுமதுதான் இசு மூல் அகுலமும் மூத்தலக்காமே. 23

திக்ரிலே நாலு வகையுண்டது திக்றுஜலியொன்று கல்பி யொன்று, திக்றுறூஹியா மூன்ருவது திக்றுசிர்றியாம் நாலாவது, திக்றுஜலியிக்கு விபாமறி திக்றில் மூக்தின திக்றேயாகும் திக்றில் மற்றுள்ள, திக்ருவது இல்லல்லா அல்லாஹு வென்றதே. 24

அல்லாபால் நபுசை விலைக்கு வாங்கவே இபுன் அறபியவர், எல் லாருக்கு மொசிய்யத்துச் சொன்னதில் இதற்கு விபரத்தைச் சொன்

*வஸ்து.

னது கேள், பொல்லா நரகத்தை விட்டுமுன்னே உரிமைவிடுவது புகலக்கேளு, நல்ல கலிமாவை யெழுபதினாயிரந்தான் நன்றாய் நீ நவிலுவாயே. 25

சொல்லிலதை விபரம் ஷரீ அத்திலே சொல்லு இல்லல்லா தரீகத்திலே, அல்லாஹுவென்று ஹகீகத்திலே அதில் ஹுவென்றது மஃரிபத்தே. 26

திக்றுகளிலொன்றை இகுலாசுடன் தினமும் எடுத்தோருக் கொன்றுபோதும், திக்றும் தாக்கிறும் மதுக்கூறுந்தான் ஒன்றாய்க் கண்டுதான் திக்றுசெய்வீரே. 27

பூமிகளுக்கும் வானங்களுக்கும் திறவுகோலுண்டு புகலக்கேளு, ஹாமீமிடத்தினி லுதுமான்கேட்க காருணையாகவே யறிவித்தது, நேம்மாய்ச்சொல்லும் தம்ஜீதுடன் நெறிசேர் இஸ்திகுபாறும் சொல்லி கோமானிசும்களில் நாலிசுமும் கூடச்சேர்த்துத்தான் சொல்லச்சொன்னார். 28

இந்தத் தசுபீஹைக் காலைநேரம் மாலைநேரமு மிதையோதினால் சொந்தமா ஆறுகாரியத்தை துய்யவன் கொடுப்பானெனவே, மூந்தப் படைத்துப் பின்வெளியால் வந்த மூஸ்தபாநபி மொழிந்ததனால், எந்த மனிதரு மோதிதந்தால் இரண்டிடத்திலும் நலவுண்டாமே. 29

ஒன்றாவது இபுலீசைவிட்டும் றப்புமிகுந்த கூலிகொடுப்பான், ரெண்டாவது சொர்க்கப்பதிதனிலே ஒதினவனைத்தான் காக்கப் படும், மூன்றாவது ஹூறுல்ஈனைக் கல்யாணம் முடித்துத்தான் கொடுக்கப்படும், பூண்டபாவங்க ளெல்லாத்தையும் பொறுப்பா னென்று தானுலாவதே. 30

அஞ்சாது அவன் மவுத்திடத்தில் அம்லாக்குவந்து மாராயம் சொல்வார், நெஞ்சில்பயங்கர முள்ளோருக்கு நிசழ்த்துவார் பயம் வேண்டாமென்றே. 31

ஆறாவது கேள்வி கணக்குக் கேட்டுஅவன் லேசாய்ச் சுவர்க்கம் புகுவான், நாரும் சுவர்க்கத்தி லுருலாவி நொடியிற் புகுதுவான் தடையின்றியே. 32

சுபுஹானல்லாஹி வபிஹம்திஹி என்று ஒரு தரம் சொன்னோ னுக்கு, நபிநாயக றசூல் சொன்னதைக் கேள் அவனுக்கொரு ஈத்தமர முண்டாமே. 33

அந்த மரம் சுவர்க்கத்தனிலே நடுகப்படுமதி னிம்மத்துக்குச் சொந்தமா, யதின்கனி யொன்றுக்கு துன்யா அடங்கலும் சரி யல்லவே. 34

இரண்டு கலிமா லேசானதுமாம் இதுதராசினில் கனமான தாம், என்று முள்ளோனுக் குவப்பானதாம் இதில் மூக்திச் சொன்னது தானென்றே. 35

ரெண்டாவது அதில் அலீமைச் சேர்த்து சொல்வததினாலே யிரண்டாச்சுது, என்றாரிது ரெண்டு சேர்த்துச் சொன்னால் இவர்க ளமலைப்போ வில்லையென்றார். 36

இந்தத் தசுபீஹை ஆயிரந்தான் சொல்வதிலும் ஒரு தசுபீ கெண்ணம், அந்தத் தசுபீஹில் அந்த கலக்கிக்கி சேர்த்துச் சொல்வ தென்றறிவாய். 37

ஈமானுடனே மவுத்தாக வேண்டி இறையோனிமாமபூ ஹனி பாவுக்கு, கேமமாயொரு வருஷத்திலே மூன்றுதரமோத மனுமில் சொன்னான். 38

அல்லாவை இமாமானவர்கள் நூறுதரங் கேட்டா ரடியார்கள் தான், எல்லாரு மீடேற்றம் பெறுவதற்கு என்ன அமல் செய்ய வேணுமென்று, வல்லான் சொன்னது முன் வந்த தஸ்பீஹை யோதுவாரைத் தொகுத்தும், நல்லாரிதை யறிந்தோ ரோதினால் நன்மை மிகவுண்டாம் நஜாத்துண்டாமே. 39

பிக்ஹு மாலை முற்றிற்று.

பிக்ஹு மாலை.

விருத்தம்

பிசுமில்லாகி யென்றசொல் நம்வேதத்தின் துவக்கமே
இசுமுல் அகுலமது அறிந்து இரவும்பகலு மோதுங்கள்
இசுமுல்லாகி மலுஹறின் மேல் இறைவன் சலவாத்துண்டாம்
அசுஹாபிக்கும் ஆலுக்கும் அத்துவாறுக்கும் றிலுவானுண்டாம்.

TAMIL NADU ARCHIVES LIBRARY No. 112633

பத்துமொன்று மெடுத்துவந்து பத்துஈரண்டும் சொல்லுங்கள்
பத்துநாலு இல்மில்ரெண்டு பறுலுஜனைப் படியுங்கள்
பத்துஈரிரண்டு லோகம் படைத்தவன் பால்பலன்பெற்று
பத்துரெண்டு பாதைதன்னில் ஒன்றுதுறந்து தெரியுமே. 2

பைத்தைந்து புறாலையும் படித்து அமலைச் செய்யுங்கள்
பைத்துநான்கு காரியம் ஹதீதைப் பார்த்து அறியுங்கள்
பைத்துநான்கு ஹறியாவையும் பத்துபேருக் கீயுங்கள்
பைத்தொன்றுநீர் பெற்றுக் கொண்டு பவுசுபெற்று வாழ்வீரே. 3

ஒன்பத்தெட்டைத் தவியுருங்கள் ஒரு கூட்டத்திற் சேருங்கள்
வன்பில் வணக்கத்தை விடாமல் வல்லோனை வணங்குங்கள்
தம்பிரானை நாயனென்று தன்னையறியாதோன் சொல்வான்
செம்பிற்கறையைப் போக்கிடில் சிவந்ததங்க மாகுமே. 4

திக்கரை மிகுந்து செய்யுங்கள் திக்றிலேத்தம் தையிபாம்
பிக்கறைப்போலே வணக்கமில்லைப் பெரியவணக்கம் ரெண்டுமாம்
சுக்றுசெய்தால் திகமாகக் கொடுப்பனெனத் துய்யோன் சொன்னான்
மக்றுசெய்தால் மக்றுசெய்வேன் என்றுமறையில் வந்ததே. 5

வல்ல வொருத்தன் திக்று செய்தால் வலியது அது தொழுகையில்
கல்லமுஹியித்தீன் இபுனு அறபி நவின்றாரதன்படி
புல்லன்பாசி அமலைவிட்டேன் போதும் திக்றுயெனச் சொல்வான்
சொல்லும் செயலுமீமானென்று செய்யதி றசூல் சொன்னதே. 6

மூன்றுமறுத்த பாகதீமாம் மூன்னோன் தாத்து சிபத்திசும்
மூன்று அகமியம் அல்லா முஹம்மதாத மூச்சுடர்
மூன்று காரியம் றஸூலுக்கு மூந்தியவனுவப்பாக்கினான்
மூன்றுமூன்றும் வேறேவேறே நாலுயாருமூவந்தது
மூன்றுமொன்று னவனுவப்பு மூன்றிலே ஜிபுரீறகுமே. 7

நாலும்எட்டும் சொல்லுங்கள் நாலு அமலைச் செய்யுங்கள்
நாலும்ரெண்டு முண்மைகொண்டு நாலுமொன்று மோதுங்கள்
நாலுமேழும் தாயிமாக நபுஸினில் நடத்துங்கள்
நாலுரெண்டும் பெற்றுநல்ல காட்சியும் கிடைக்குமே 8

நாலுகலிமாச் சொல்லுங்கள் நாயனுக்குவப்பதாம்
நாவில்தகுலீ லறியாவிட்டால் நகைக்கப்பட்ட காபிரும்

நாலுமருணா நாலுபர்லும் நாலுஷறுத்து மறியுங்கள்.
நாலுகலிமா அறிந்துதொழுதால் நல்லமூமின் முஸ்லிமே 9

அஞ்சுமேழு மறியுங்கள் அஞ்சுமெடுத்து ஆறையு
நெஞ்சிலுண்மை கொண்டுநீங்கள் நித்தம்திக்றைச் செய்யுங்கள்
பஞ்சுபோலே பறக்குமே பாவமிகுந்து செய்யினும்
அஞ்சிவிலகலைத் தவிர்த்து அழகுஏவல் செய்வதே 10

அஞ்சுமூன்று மெட்டதை ஆதிமுந்தி யோதினால்
அஞ்சுஒருத்துத் தொழுகையிலே அந்த ஸூறாத் தோதுங்கள்
அஞ்சிப்பயந்து ஆண்டோனுக்கு அடிமைத்தனத்தைச்செய்யுங்கள்
நெஞ்சிலுண்மை யோர்மைகொண்டால் நீங்கள்சுவர்க்கம் புகுதுவீர்.

ஆறுமஞ்சு மஞ்சிலே அனாதியான மந்திரம்
நாறில்நின்றும் பிறந்தஅவீசு பஞ்சபூத நாறதை
வேறுஎன்று கண்டவன் வேறுபட்டுப் போனவன்
தாறுமாறாய்ப் பேசுவான்தன் றப்பையறியா தவனென்றார். 12

ஏழுகலிமாச் சொல்லுங்கள் ஏழுசிபத்தை யறியுங்கள்
ஏழுமறுத்தபா மக்காமும் ஏழுஎன்று அறியுங்கள்
ஏழுசபுஸில் ஏழுதிக்றில் எந்தத்திக்றும் ஓதுங்கள்
ஏழுநரகமுங்கடந்து ஏழுஒன்றுங் கிடைக்குமே 13

இணையைவிட்டு ஏவலையெடுத்துக் கோவில்கலை
அணையவொட்டாமற் றவிர்ந்து அஞ்சி அமலைச் செய்யுங்கள்
துணையைத் தேடினவர்க்குத் துய்யநாய னொருத்தன் போதுமே
பணமுமக்களும் பாவிக்குப் பலன்கொடாதென் றறிகுவீர். 14

ஏழுமூன்றும்கொண்டுகல்கை இறையோன்படைத்தா னெனச்சொன்
னான், ஏழிரண்டுலோகமும் றஸூலினொளிவைக் கொண்டுதான்
ஏழுபிறவிப் பிறப்பானென்று இறையை யறியாதோன் சொன்னான்
ஏழையிதனைச் சொன்னேனெளிய செய்யிது அப்துல் காதிறே 15

இல்மையுடையோருக்குப் பகையர் இல்மிலாத ஜாகிலாம்
இல்மையுடையோரைப் பகைத்தால் ஈறிநரகம் புகுதுவான்
இல்முள்ளோரை யுவந்திருந்தோன் ஈறிசுவர்க்கம் புகுதுவான்
இல்மின்படிக்கு அமல்செய்யாதோன் இபுலீசுக்குச் சரியென்றார். 16

இல்மின் தலையையுமறி இல்மின் தீர்மானமுமறி
இல்மிலமல் தெளிவறி இக்தகாலு மறிந்தபின்
இல்மின்தௌ ஹீதையறிந்து இறையையறிந்து கலப்பற
இல்மின்படிக்கு அமலைச்செய் திடேற்றம் பெற்றுவாள்வீரே 17

பிக்ரு மாலை முற்றிற்று.

உஜூது மாலை.

தொங்கல்.

உஜூதுக்கே யெல்லாப் புகழுமுண்டாம் உள்ளமையல்லால வேறில்லையே, உஜூது மலுஹரில் அத்தமானோர்மேல் உடையோன் ஸலவாத்தெப்போது முண்டாம், உஜூதையறியவே உஜூது மாலை உரைசெய்தது மலாஹிரிலொருவன், உஜூதை யறிய நல்லுதவி வேணும் உஜூதைக் கொண்டுதான் காரியமே. 1

உஜூதின் பொருளறி உள்ளமைதான் உண்டாயிருக்கிற ஆல மல்ல, உஜூதைக் கவுனென்றும் சொல்லப்படும் உள்ளமையல்ல மும் கின்னது, உஜூது மும்கினை யறியாதவன் உஜூது ஒன்றுதா னென்று சொல்லி, உஜூது ருக்கூஜயும் செய்யமாட்டான் சுத்த ஜாகிலா யிருக்குமென்றார். 2

உஜூது முத்லக்கு ஹகீகியாகும் உஜூது மும்கின்தான் மஜாஜியாகும், உஜூது ஹகிகீதான் ஹக்கேயாகும் உஜூது மஜாஜி தான் கல்க்கேயாகும், உஜூது ரண்டல்ல ஹகீகத்தினில் உஜூது ஒன்றென்று அறிந்து கொள்வாய், உஜூதை யறிந்த பேர் வணக் கங்களை ஒரு போது மொழிந்திருக்க மாட்டார். 3

உஜூது ஒன்றென்றால் அம்றுகசீ உடையவன் பேரிலெப்படி யாம், உஜூது ஒன்றென்றால் உஜூதைக் கொண்டு உண்டான உஜூதிணையாகாது, உஜூது ஒன்றாகும் அகமியத்தில் உஜூது ரண்டாகுங் குறிப்பானதில், உஜூதின் விபரத்தை யறியாதவன் ஒயாத்தர்க்கத்தை யுடையவனே. 4

உஜூதுந் தாத்துந்தா னென்றேயாகும் உஜூது தான் ஹக்கும் ஹகீகத்துமாம், உஜூது உள்ளமை யொன்றது தான்

அதமையொரு போதும் கபூல் செய்யாதே, உஜூதைத் தவிர மும்கின் ஆதமைக் கபூல் செய்யுமென்று வுரைக்கப்படும், உஜூது முத்லக்கு அதமை ஒரு போதும் கபூல்ச் செய்யா தெனவுரைத்தார்.

உஜூதில் மூன்றுண்டு மொன்றாவது உஜூதில் முத்லக்காம் ரண்டாவது, உஜூதில் மும்கின் தான் மூன்றாவது உஜூதின் மும் தனியா யிருக்கும், உஜூதில் முத்லக்கு வாஜிபாகும் உஜூதில் மும்கின் தான் ஜாயிசாகும், உஜூதில் மும்தனிஃ சரிக்குல்பாரி உஜூது முத்லக்குக் கிணையில்லையே. 6

உஜூது உஜதாக இருக்கும் புறம் உஜூது காரிஜியாவுமல்ல, உஜூது காரிஜியாகிறது வெளியிலுண்டான மவுஜூதாகும், உஜூது திஹினியுமல்லவது உள்ள அஷ்யானா முளகூறத்தும், உஜூது இது ரண்டும் உஜூதுடைய வகைகளில் நின்று மொரு வகையாம். 7

உஜூது முத்தலக்கா யிருக்கும் புறம் உஜூதுக்கு ஒரு கைது மில்லை, உஜூதுக் குல்லியுமா யிராது உஜூது குசூயிமா யிராது, உஜூது ஆமல்லமாசமல்ல ஒக்கத்தது கொண்டு ஜாயிசல்ல, உஜூ தும்தாத்துந்தான் வேறேயல்ல உஜூது யிகுதமு மல்லவென்றார். 8

உஜூதின் மறுத்தபா வேதங் கொண்டு உஜூதுக்கு எல்லா வஸ்து முண்டும், உஜூது மறுத்தபாகாற்பதுண்டும் ஒருவரேழிலே சுருக்கினார்கள், உஜூது ஜவ்கரும் அறுலுமல்ல உஜூதுக்கு மாற்றமிதுலுமல்ல, உஜூதுக்கு ஜின் சும்பசுலுமல்ல உஜூதுக்கு ஹத்துமில்லை யென்றார். 9

உஜூதுக்கு இப்திதாவுமில்லை உஜூதுக்கு இந்திஹாவுமில்லை, உஜூதுதான் அவ்வல் ஆகிறாதும் உஜூது தான் லாகிறு பாத்தினா கும், உஜூதைக் கொண்டுதா னெழுசிபத்தும் உஜூதுக்கு எல்லாக் கமாலு முண்டாம், உஜூது எல்லாந் தாத்தைத்துடரும் உஜூது ஒன்றல்லா பலதில்லையே. 10

உஜூதின் மறுத்தபா எழாமதில் ஒன்றாவது அஹதிய்யாத் தாகும், உஜூதின் மறுத்தபா ரெண்டாவது உஹதத்து அஹமதந் குறிப்பாம், உஜூதின் மறுத்தபா மூன்றாவது ஒன்றானவாஹி தியத்துவாம், உஜூதின் மறுத்தபா இது மூன்றுந்தான் கதிமே யல்லாது புதிதல்லவே. 11

உஜூதின் மறுத்தபா காலாவது உண்டான ஆலம் அறுவா ஹாகும், உஜூதின் மறுத்தபா ஐந்தாவது உண்டான ஆலம்மிதால தாகும், உஜூதின் மறுத்தபா ஆறுவது உண்டான ஆலம் அஜிஸா மாகும், உஜூதின் மறுத்தபா ஏழாவது ஆலம் இன்சானென் றுரைச்கலுற்ருர். 12

உஜூதுக்கு மகுன உதிப்பாம் உஜூதிலுதித்தது சகல வஸ்தும், உஜூதுச்கு ஒரு குறிப்பில்லாமல் இருந்தது அஹதிய்யத் தாகும், உஜூது ஒன்றென்ற அஹதிய்யத்து உஹதத்தும் வாஹிதிய்யத்து மொன்றும், உஜூதிலிது மூன்றும் மூன்பின்னல்ல ஒன்ரு யிருக்கு மென் றறிந்து கொள்வீர். 13

அல்லாஹு வென்ற இசுமானது இஸ்மூல் அகுலமா யிருப்ப தினல், அல்லாஹுக்குள்ள தடங்கலுக்தான் அடங்கி யிருப்பதால் ஜாமிகாகும், அல்லாவைப் போலே ஒரு வஸ்துவும் அல்லமறை யினில் வந்தது போல், அல்லாஹு என்ற இசுமது போல் அறவே ஒரு இசுமில்லை யென்ருர். 14

அல்லாஹு என்று தாத்துக்கும் பேர் தாத்தும் சிபாத்துக்கும் பேருமாகும், அல்லாஹு என்ற பேர்க் குவமைஅறி இன்சானென்ற பேர்போலேயாம், அல்லாவை அறிந்தோர்க ளெல்லாம் அவனை தவிர வேறொன்றுங் காணர், அல்லாஃ மலுசருல் அதம்முமேலே அதிக கிருபை செய் யெக்காளுமே. 15

உஜூது மாலை முற்றிற்று.

ஷாஹூது மாலை,

ஹக்கை கல்க்கிலே தெரிசிப்பதில் கல்க்குக்குச் செயலில்லை யென்றோர், ஹக்காக அவர் ஜெயம் பெறுவார் கல்க்குக்கு ஹயாத் தில்லை யென்றோர், ஹக்கு பால்கமாலைப் பொதிந்தோர் கல்குதா னில்லையென்று கண்டோர், ஹக்கனளவிலே வாசிலானர் காமிலொலி யுல்லா என்றறிவாய். 1

முந்தின ஷாஹூது முபுத்ததிக்காம் முந்தகி ஷாஹூது பிந்தின தாம், எந்த ஷாஹூதிலும் இறையோனுக்கு இணையில்லை

யென்று அறிந்து கொள்வாய், நந்தியெனுஞ் செய்கை கேட்டறிந்து நன்மையுஞ் செய்வாய் ஷுஹூதும் செய்வாய், முக்தியும் பிந்தி வெளிமறைவும் முன்னேனல்லாது வேறில்லையே. 2

மொத்தமாகிய ஷுஹூது முண்டாம் முகையதாகிய ஷுஹூது முண்டாம், ஒத்துமையான ஆரிபீன்கள் ஒன்றைக் காண்பார்கள் எல்லாத்திலும் குற்றமவர்களுக் கொருவர் செய்தால் குதாய்காக வேண்டிப் பொறுத்துக் கொள்வார், செத்தமையத் தைப்போலிருப்பார் சேர்ந்த பெரியோர்க ளெல்லாருமே. 3

அக்மலுஷ் ஷுஹூத் ஹுறுமத்திலே அதை ஒஸ்தாதிடம் கேட்டறிவீர், முக்கம்மிலாகிய பேர்க ளெல்லாம் முதலக்கு ஷுஹூது மறிவார், முக்கையதாகிய ஷுஹூதைச் செய்வார் முரீதுகளிற் றுவக்கமானவர்கள், முஹம்மதிய யூன்க ளெல்லாருந் தான் முன்னேனை யறிந்திருப்பார்களே. 4

தன்னையல்லாது சைகை றப்பயரத்தன்னில் தெரிசனை முகைய தாகும், முன்னேனை யெல்லா வஸ்துவிலும் முஷாகதாச் செய்தால் முதலகாகும், உன்னைக் கொண்டுதா னுனக்குத்திரை உடையோன் போட்டதா லுன்னை நீக்கி, பின்னை யுன்னிலே யவனைப் பார்த்தால் பிசகாமல் றப்பை யறிந்து கொள்வாய். 5

ஹக்கின் உஹதத்தை யறிந்தோர்களின் கல்க்கிலே ஹக்கை ஷுஹூது செய்யார், ஹக்கை கல்க்கிலும் ஷுஹூது செய்வார் கல்க்கை ஹக்கிலும் ஷுஹூது செய்வார் ஹக்குக்குமாறு செய்கிற வர்ஹக்கை யொருபோது மறிய மாட்டார், ஹக்கை யறியாத ஜாகிலானோர் ஹக்கை யெப்படித் தெரிசிப்பார்கள். 6

தெண்டிப்பில்லாத பேர்களுக்குத் தெரிசனை யொருபோது மில்லை, சண்டித்தனமாக ஷறகை விட்டுச் சறுகி நடந்தோர்க்குச் சுவர்க்கமில்லை, என்று முள்ளவனொருவ னென்று இணைகளவனுக்கு இல்லை யென்று, கண்டு அமல் செய்தோர் ஹக்கிடத்தில் களி கூர்ந்திருப்பார்கள் ஜென்னத்திலே. 7

ஷரீ அத்தை விட்டால் தரீகத்தேது சற்று ஹகீகத்தின் வாடை பெற்றூர், பரீகத் தென்னுங் கூட்டமதிற் சேருவான் பஞ்சு அவ னுக்கு மகரிபத்து, தெரிசினை யெந்தப்படி யுண்டாகும் தேர்ந்த

பெரியோர்கள் சொன்னதுவாம், அரிய பெரியோனை அறியாதவன் அமல் கபூலாகாதென் றுரைத்தார். 8

முருக்கபாவுக்கு மகுறைவறி முன்னோர்கள் சொன்ன சொல்லுப் போலே, ஹறாமைச் செய்கிற நினைவு வந்தால் காவிக்கைப் பேணித் தவிருவார்கள், இருதத்தில் தன்னை நபிச் செய்வார்கள் இறையை நபுசிலே தரிப்படுத்தி, குருனின் படிக்கு நல்லமல் செய்வதால் குதாயின் றசூல்குண குறுஆ னென்றார். 9

அல்லாஹாவினு நாவிறென்றும் அவனமுடனேயா யிருக்கு மென்றும், எல்லா வஸ்துகளையுஞ் சூழ்ந்து இருக்கிறா னென்று அறிகிறதும், அல்லாஹு லாயிலாஹ இல்லல்லாஹு அவன் ஹையுல் கையூமென்றும், அல்லா எல்லா வஸ்துவையுங் காண்பான் அவனை யொருவருங் காணார்களே. 10

தாக்கிறு மதுக்கூறும் ஒன்றென்று தான் தாயிமாக நீ ஷுஹூது செய்து, சாக்கிறு மஷ்கூறு மொன்றென்று நீ தவுகீது செய்தால் வாசிலாவாய், மாக்கிறுக்கவன் மாக்கிறென்று மறையில் வந்ததால் மகறை விட்டு, வாக்கினாகவும் தாயிபீனாய் வணங்கினோர் கள் தான் வலுப்பமானோர். 11

உன்னை பனாவாக்கி றப்பையுன்னில் காணவுரைக்கிறேன் உற்றுப்பாரு, தன்னை நீக்கித் தன்னுடைய சூறத்தைத் தன்னில் பார்த்த பின்பு, தன்னை றசூலுல்லா வென்று கண்டு தன்னூறை ஹக்காய்த் தெரிசித்தாயானால், முன்னாறுங் கடற்குள்ளேமூங்கி மூன்று மொன்றாகக் காண்பா யென்றார். 12

ஆரிபீன்களில் சிறிதுபேர்கள் அறிந்ததின்படி ஷுஹூது செய்யார், ஆரிபில் சில ரறிந்தபடிக் காதியைக் கல்க்கில் ஷுஹூது செய்வார், ஆரிபில்லாத ஆம்கல்குகள் அல்லாஹ்வைக்காணத் தேடினதால், மாரிதாகிய ஷைத்தானொரு சூறத்தைக்காட்ட மருண்டு போவார். 13

* கதறத்தை உஹதத்தில் ஷுஹூது செய்வார் காமிலீனானோ ரெல்லாருந்தான், கதறத்தில் உஹதத்தை ஷுஹூது செய்வார் ஹக்கிலே வாசிலானோர்களே. 14

ஷுஹூது மாலை முற்றிற்று.

அதபு மாலை.

எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்குண்டாம் இறையோன் ஸல வாத்து றசூல் பேரிலாம், நல்லகிளையார்க்குந் தோழமார்க்கும் நாயன் பொருத்த மெப்போது மூண்டாம், எல்லோரு மறியும்படியாய் எடுத்து உரை செய்தே னதபுமாலை, வல்லவொருத்தனும் அதபில் லாதோன் வல்லோனை யறியாதவனே. 1

அறிவைப் படித்ததின் படிநடக்கா ஆலிமும் இபுலீசும் சரி நெறி சேர், இமாமுஹம்மது ஷாபிஇ நிகழ்த்தினரிதைக் கித்தாபு தன்னில், மறையின்படி நடக்காதவர்கள் மவுலாவையறியாதவர்கள், இறையவனுடன் தபாவாவது ஏவலதன்படி நடப்பதுவே. 2

அதபு கெட்டவனாகிறவன் அதபில் பறுலொன்றும் பேணமாட் டான், அதபியில் சுன்னத்தை யெடுக்கமாட்டான் ஆண்டோன் செயலெனன்பான் எல்லாத்தையும், குதுபுகளைக்கொண்டு உண்மை கொள்ளான் குதாய்க்கு வழிப்பட்டு நடக்கமாட்டான், அதபு உள்ள வனாகிறவன் அதபு பறுலொன்றும் விடவேமாட்டான். 3

அல்லாஹ்வுடனேயும் அதபுவேணும் அவன்றன் றசூலுட னதபு வேணும், எல்லா ஒலியுட னதபுவேணும் எல்லாருடனேயு மிணக்கம் வேணும், பொல்லாதவன் பேரில் கிருபைவேணும் போனதைப் பேசாதிருக்கவேணும், அல்லாவையறிந்தோ ரதபு அவனுட பறுலதை யெடுப்பார். 4

அறிவில்லாதவ ரறிந்தோரிடம் அறியாததைக்கேட்டுப் படிக்க வேணும், அறிவையறிந்தவ ரறியாதார்க்கு அறியாததை யறிவிக்க வேணும், மறையி லிறையவன் யறைந்ததுபோல் மனிதரெல்லாரும் நடக்க வேண்டும் பெரியவன் சிறியவன் குறிகெட்டவன் வேதத் தின்படி நடந்திடானே. 5

* அக்குலில்பறுலு ளாலுண்டதுகேள் அஹறதையறிவதும் பொருந்துவதும், சுக்றுசெய்வதும் சோறுண்குமுன் பிஸ்மில்லா வென்று சொல்வதுமே. 6

---

* உண்குதலில்.

அருந்துவதில் காலு அதபுண்டுகேள் அடுக்கத் தின்பதும் சிறுபிடியும், வருந்தி மீளமாய்ச் சுவைப்பதுவும் மனிதரைப் பாரா திருப்பதுமே. 7

அதபு கெட்டவனுகிறவன் அல்லா றசூல்சொல்லை யெடுக்காத வன், கதுபுசுன்னத்து பறுலுவாஜிபு காலுமெடுத்தவ னதபுள்ள வன், குதுபுகளில் இமாம் சொல்லுகளும் குதாய்றசூல் சொல்லு மூன்று மூண்டாம், மற்றும் இல்மெல்லாம் பாத்திலாகும் மவுலா சொற்கொண்டு அமல்செய்வாயே. 8

தோழமைமூன்று பகுதியிலே செய்குமாருடன் தோழமையும், தாழ்ந்தபேருடன் தோழமையும் தனக்கு நிகரானேன் தோழமை யும், காள்களிலெல்லாம் ஷெய்கு ஹாலை கல்லாய்க்காண்பதும் கிதுமத் துடன் வேலையில் குற்றம் சொல்வதை நீ விடுவதும் ஷேர்க்கதபாகு மே. 9

உன்னில் தாழ்ந்தவன் தோழமைக்கு உபதேசம் வேணும் கிரு பைவேணும், என்ன குற்றங்கள் குறைச்சலின்மேல் உணர்த்தி வருத்திவைப்பதுவு மென்றூர். 10

தனக்கு நிகரானேன் தோழமைக்கு சங்கைதெரியுதல் ரோஷம் வேணும், உனது தோழன்றன் ஐபைவிட்டு உள்ளில் குருடுபோலி ருக்கவேணும், மனதிலுதாதனம் பண்ணிக்கொண்டு மணமாய தைத் தடமழிக்கவேணும், கனதியுடனே மூமின்களிந்தக் காரியங் களைப் பேணுவாரே. 11

அல்லாவுடைய றசூலுடனே தோழமையறியாய் சுன்னத்தை எல்லாந்தொடர்வதும் இறைவனுட அவுலியாவுட இணக்கமூந்தான் கல்லகிதுமத்தும் ஹுறுமத்துவும் காயனுட கற்குணமும், வல்ல மூஸ்லீம்கள் ஜாகிலுடன் மருவியிருப்பதும் அவாவுமாமே. 12

கெட்டோனிலும் மெத்தக்கெட்டவனும் கெட்ட காரியம் செய்து சொல்வான், கெட்டபாவத்தை யென்பேரிலே கட்டளை யிட்டால்கேள்வியேது, மூட்டாள் ஷைதானு மதுபோற் சொன்னன் முன்னளில் ஆதமலைஹிஸ்ஸலாம், கட்டளைகொண்டு ஹுஜ்ஜத்தாக சத்தனுடன் பேசவில்லை யென்றூர். 13

அடியானுக் கதபாகிறது ஆதம்சொற்போலே யாண்டவனே, அடியார் காங்களெங்கள் கபுசை அநியாயஞ்செய்தோம் பொருக்கா

விடில், நெடுகிலும்கட்ட வாளியாவோம் என்று சொன்னபின் நிறைந்தோன் சொல்வோன், அடியானே யுந்தன்பாவம் எந்தன் கலாக்கொண்டானதால் பயப்படாதே. 14

இல்மைப்படிப்போருக்கு அதபாவது இறையோன் மூகத்துக் காய்ப் படிக்கவேணும், இல்மைமிகுதிக்காய்ப் படிக்கிறவன் ஏறு கடை ஜாகிலாவான் கண்டீர், இல்மைத் தர்க்கத்துக்காய்ப் படித் தோன் ஈறில் மூனுபிக்காய்ச் சாவான் கண்டீர், இல்மை அமலுக் காய்ப் படித்தோரெல்லாம் இவர்கள் மூமீனென் றறிந்துகொள்வீர்.

அமலுக்காய் இல்மைப் படிப்போருக்கு அதபுகல்பு துப்பரவு வேணும், அமல்களிலெல்லாம் காட்டம்வேணும் அங்கிய்யத்துமில் லாதிருக்கவேணும், அமலில் பர்லையும் சுன்னத்தையும் அழகாகக் கொண்டு வரவும் வேணும், அமல்கள் கபூலாக வேணுமானால் ஷறுத்து வாஜிபை யணைந்து கொள்வீர். 16

எல்லாருடமையும் பேணவேணும் இல்மைச் சங்கையாய்க் காணவேணும், பொல்லாக்கருமத்தைத் தவிரவேணும் பொன்னைக் கொடுத் தில்மைப் படிக்கவேணும், நல்ல உலமாபால் நெருங்க வேணும், நயமாயூண்துயில் விடவும்வேணும், வல்லஹறவாவையும் விட்டாயானால் வலியோனிடம் காட்டம் பெற்றுக்கொள்வாய் 17

தெண்டிப்புவேணும் எல்லாத்திலும் தெண்டித்த பேர்கள் பெற்றுக்கொள்வார், கண்டிப்பாகிய பலர்களுக்குக் கசப்பாயிருந்தா லும் சபுருசெய்தால், என்றுமின்பத்தை யனுபவிப்பாய் எலலா இல்மையும் பெற்றுக்கொள்வாய், சண்டித்தனமாக வெறுத்தோனு டன் சாந்தகுணமாக இருப்பதுமே. 18

வாயில்மிகப்பேச்சை விடவும்வேணும் பம்பரவிளையாட்டைத் தவிரவேணும், காயனைவிட்டுப் பராக்காகிற கடத்தைகளைவிட்டுப் புரக்கணியே. 19

உள்ளத்தைக் கொண்டு போதுமாக்கு உடனே நீ ராஜாவா யிருப்பாய், உள்ளத்தையெல்லாம் ஒழித்துவிட்டு ஒகுத்திகளில் இலமைப் பாடமிடு, பிள்ளை குட்டிகள முதல்சபலைப் பொருந்து மூவப்பெல்லாம விடவும்வேணும், கள்ளப் பகிறைப்போல் வாசல வாசல் கல்விபடிக்க நீ சுற்றுவாயே. 20

தோட்டங்கடை பழுதாக்க வேணும் தொகையிலடங்கலை யொழியவேணும், தேட்டமுள்ளவன் வேறளவில் சிந்தைப்பாராக் கில்லா திருக்கவேணும், நோட்டத்திற் பிசகானதெல்லாம் நோக்கித் திட்டமா யறியவேணும், காட்டமுள்ளோர்கள் வாயில் நின்றும் நல்ல இல்மதைத் துடர்வதுமே. 21

இல்மையுடையோர்பால் போக்குவரத்தாக இருகேளு எடுத் துச்சொல்லு இல்மில் காமிலைப்போலானாலும் இல்மை யிழந்தவ னென எண்ணிக்கொள், இல்மைக்கொண்டு நீ அமல் செய்துக் கொள் இல்மைப்பாரு நீ படிந்துக்கொடு, இல்மெனுங்கொடை ஒளிக்கிறது இறைக்குமாறு செய்தோர்க் கில்லையென்றார். 22

தகப்பன்மார்களில் ஏத்தமான தகப்பன் உஸ்தாதைச் சங்கை செய்ய, உகப்பாயிருந்து நீ கிதுமத்துச்செய் உடனே யவர்க்கு நீ யடிமைபோலே, நகைப்பா யவர்தொழில் தனைப்பாராமல் நாடி பத்துவாக்கேள் சொல்லைப்பாரு, பகைப்பாய் ஷைதானைப் பலரை விட்டும் பற்றிப்பிடி யொரு உஸ்தாதை நீ. 23

பெரியோர்களிடம் போயிரு நீ பெருமை வெட்கத்தைத் தவிர்த்து விடு, தெரியாததைக்கேளு கபூல் செய்துக்கொள் தறகங் கொடுக்காதே, தெரியாவிட்டால் குருவானோர் சினந்திருந்தாலு மாம் குடிவிட்டவரிடம் இல்மைத்தேடு, அருமையாகிய இல்மைப் படிக்க அநேகந் தன்மைக்கு கபூல் செய்வாயே. 24

இல்மைக்கொண்டு நீ தெண்டித்துக்கொள் இல்லாதிருக்கில் நீ கழுதையாவாய், அல்லாஹ் சொன்னதை யாராய்ந்துபார் அவ னுக்குவமை நாய் கழுதையென்றும், இல்மைக்கொண்டமல் செய் யாதோனை இணைவைத்தோர்க்கு முன்னதாபு செய்வான், பொல்லா இபுலீசும் அவனுஞ்சரி என்று நம் இமாம் புகலலுற்றார். 25

அதபு மாலை முற்றிற்று

அறிவு மாலை.

இறை யோனுக்கெல்லாப் புகழுமுண்டாம் எந்தவகையாலும் புகழ்தந்தற்பின், அறபியாகிய றசூலுல்லாமேல் ஆண்டோன்சலவாத் தெப்போதுமுண்டாம், அறிவுமாலையைப் பாடுதற்கு அவன் றஹு

தவிவே ணுமதிலே, அறிவுகளுக்கெல்லாம் தலையறிவு ஆண்டோனை யறியுமறிவே. 1

இல்ம்தான் நபிமார்கள் அனந்தரமாம் இதற்கு அனந்தரர் உலமாக்களாம், இல்முதனைக்கொண்டு அமல்செய்யாதோன் இபுலீசும் அவனும் சரியாம், இல்மைப்படைத்தோரில் அமல்செய்யாதோன் இவன் ஹிமாறு நாயைப்போலாமென்று, இல்மையுடைய நாயன்குருனில் இறக்கினுன்ரண்டு ஆயத்திலே. 2

அறிவிலேரண்டு வகையுண்டதில் ஆண்டோனையறிகிறது ஒன்ரும், இறையோன் வாஜிபாக்கினதையெல்லாம் அறியும் வகை யிது ரண்டாகுமே, அறிந்ததைக்கொண்டு அமல்செய்தாக்கால் அப்போதவன் ஆலிமாயிருப்பான், இறைக்குமாறு செய்தால் அவனில்மெல்லாம் இல்மில்ஜாகிலென இயம்பினுரே. 3

இல்மைக் கொடுக்கப்பட்டவர்களுக்கு இறையோன் பதவியையுயர்த்தினதால், இல்மில் மறுத்தபாவாகிறது எல்லாமறுத்தபாக்களுமேலாம், இல்மில்லா சுகதாக்ளுமேலாம் எல்லா நபிமார்க்குங்கீழேயாகும், இல்மாலிமையும் ஷுஹதாரத்தமும் நிறுக்க யிவர்மைதான் முனைக்குமென்ருர். 4

இஸ்லாம் போய்விடும் நாளைக்கொண்டு இந்தநாளையும் உறைக்கக்கேளீர், முஸ்லிமானேர்கள் அறிந்ததைகொண் டமல்செய்யாததும் முந்தினது, பிசகானதைத்தீர்க்க அறியாமலே பேணுமலமல்செய்வதுவும், கசுலாகப் படியாததும் கல்விபடிப்பதை விலக்கல்நாலே. 5

ஆலிம் ஆபீதைக்காண ஏத்தம் ஆண்டோருமமத்துக்கேத்தம் போலே, ஆலிமைச்சங்கை செய்வதுதான் நபியையவன் சங்கை செய்ததென்ருர், ஆலிம்ஷைத்தான் மேலேகடிசாம் ஆபீதாயிரம் பேரைக்காண, ஆலிமுகத்தைப்பார்ப்பது ஆயிரம்ஆண்டு வணக்கு வதிலுமேத்தமே. 6

இல்மைப்படிக்கவே நாடியொரு எட்டுவைக்குமுன் பிழை பொறுப்பான், இல்மைதேடினு லவனுக்கது எல்லாப்பாவத்தின் தெண்டமாகு, மில்மையொரு சாஅத்தில் தேடினுல் இராவில் வணங்கு வதிலு மேத்தமாம், மில்மை யொரு நாளையில் தேடினுல் மூன்றுமாத நோன்பிலு மேத்தமே. 7

இல்மையறிந்தவனா யிருந்தா லில்மினதபுகள் பதினேழுண்டாம், இல்மைதனைப்பற்றி பிடிப்பதொன்று ஏதுகுற்றமும் பொறுப்பதொன்று, இல்மைச் சங்கைசெய்யுங் கோலத்தில் இருப்பது அது மூன்றாவதாம், இல்மைப் படித்தவன் தலையைத்தாழ்த்தி இருப்பது அதில் நாலாவதே. 8

பெருமை விடுவது மனிதர்கள்மேல் பெருமையடிக்கு மங்கீதனென்று, யிருப்பிடங்களில் தாட்சணையும் எளியோரைக்கேலி பண்ணாமலும், சரீஅத்தில் பேணுதலுவு மறிவுதன்னைப் படிப்போர்மேல் கிருபையையும், துரிசத்தில் விளங்காதோனுக்குச் சொல்லிக் கொடுப்பதில் தாமதமே. 9

திருத்துவதும் ஜாகிலானோர்களை தெரிந்ததைச் சொல்லிக் கொடுப்பதுவும் தெரியவில்லையெனச் சொன்னோன்பேரில் சினமாய் பொறுத்தக்கேடாகாமலும், பெரியகாட்டம்வைத்தறிவுகளைபிரித்துச் சொல்வதும் விளங்கமட்டும், ஒருவன் ஹுஜ்ஜதைக் கபூல்செய்வதும் உடையோன் மூகம் நாடிப்படிப்பதுமே. 10

இல்மேத்தக் தொழுகை ஸக்காத்து நோன்பு ஹஜ்ஜு எல்லாத்திலேயும், இல்மை இபாதத்தைத் தேடுவதில் தவாபு எழுபத்திரண்டு சித்தீகு, இல்மாளியை வானத்தோருவப்பார் எல்லார்களும் பிழைப்பொறுக்கத்தேடும், இல்மை உலமாவை உவந்தோர் சிறுபாவமெழுதப்படாதே யென்றார். 11

அறிவு ராஜாங்கமுதல் மூன்றினில் அறிவை சுலைமாநபி தெரிந்தார், சிறப்பான இல்மைத் தெரிந்ததினால் சேர்ந்தரெண்டையுமாண்டோனீந்தான், அறபியாகிய றசூலுக்காண்டோன் இல்மையதிகங்கேளென்றதனால், இறையோன் இல்முள்ளோர் பதவிகளை ஏற உயர்த்தினேனென்று சொன்னான். 12

எல்லா வஸ்துக்கும் தூண்களுண்டும் இந்தத் தீனுக்கு தூண் பிகுஹு, அல்லா ஒருத்தனை விளக்கிவைப்பான் அவனைக்கொண்டு கைறை நாடினால், வல்லானை வணங்கப் படுவதிலு மேத்தம் வல்லான் தீன் விளக்கம் நல்ல உலமாக்கள் ஏத்தமாகும் அவரிலு மேத்தம் நன்றி யுள்ளோர். 13

ஆலிம் பாவம் நாற்பது பொறுப்பான் அறிவில்லானுக்குப் பொறுக்கு முன்னே, ஆலிம் கியாமத்தில் வரும் போதையில்

அவரொளிவது பிரகாசிக்கும், ஆலிம் இல்மதனைப் படிப்பிப்பது அது எத்தம் பீசபீலைக்காண, ஆலிமானோரில்மை மறைத்தால் அதற்குக் கடிவாளம் நெருப்பாலாமே. 14

ஆலிம் மவுத்தானால் கபுறுதனில் அவர் தன் இல்மை சூறத் தாக்குவான், ஆலிமுக் கதுமருவுதலாய் ஆகுங்கபுரில் ஊர்வனவுந் தட்டும், ஆலிம் நபிமார்கள் நிற்குந்தலம் தன்னிலவர் நின்று மன்றாடுவர் ஆலிமன்றாடுவது நபிமார்கட்கு அடுத்தாண்மையாக நிற்பார். 15

இல்மைப் படித்துத்தான் கொடுத்தவர்க்கு இல்மைக் கொண் டமல் செய்த கூலி, இல்மில் ஒரு பாடம் படிப்பிவித்தால் இதன் கூலி கியாமம் வரைக்கும், இல்மைப் பெருமைக்குத் தாக்கத்துக்கு இன்சான் முகங்களைத் திருப்பிவிக்க, இல்மைப் படித்தாலாண்டோ னவனை ஈறில் நரகத்தில் புகுதுவிப்பான். 16

இல்மைத் துனியாவில் படிப்பதிலே ஏதும் பிரயோஜனமும் நாடினால், இல்மைக் கொண்டு தான் கியாமத்திலே சுவர்க்கத்து வாடை யெத்த மாட்டான், இல்மையதிகமா யாக்கினவன் நேர் வழியை யதிகமாக்கா விட்டால், இல்மையுடைய நாயனிலே நின்றும் தூரத்தை யேத்தமாக்கினானே. 17

இல்மைச் சிறு வயதிற் படித்தால் கல்லில் சித்திரம் எழுத்துப் போலாம், இல்மை வயது சென்றே படித்தால் இதற்குமிதால் நீரில் எழுதினாற் போல், இல்மை யுடையோரைக் கோபமானோர் கேள்வி யின்றியே நரகஞ் சேர்வார், இல்மை யுடையோரைப் பிரிசம் வைத்தோர் கேள்வி யின்றியே சுவர்க்கஞ் சேர்வார். 18

இல்மைப் படித்துத் தான் கொடுத்தவரை எவரும் தூஷணிப் பாகக் கண்டால், இல்மைப் படித்தோர்க்கு மூன்று பலாய் இறையோனவருக்கு இறக்கி வைப்பான், இல்ம் தான் மறந்து போம் முந்தினது இரணங் குறைந்துபோ மிரண்டாவது, இல்மு மிரணமும் குறைந்த தல்லாமல் ஈமானும் போகுமெனவறிவாய். 19

இல்மைப் படிப்பவன் கேட்கிறவன் இம்மாளிவாசல்தனிற் சென்றக்கால், இல்மை யுடையவன் ஒரு வருஷ இபாதத் தெழுது வான் ஒரு அடிக்கு, இல்மைப் படித்தோர்க்குச் சுவர்க்கத்திலே

எடுக்கப்படு மடக்கொரு பட்டணம், இல்மைப்படிக்கவே நடந்தால் பூமி இவன் பிழை பொறுவெனத்தேடுமே. 20

ஆலிம்முக்த அல்லி மிருவரிலே ஆர்க்குமொரு மூணர்த் தண்ணீர் கொண்டு, ஏதுமானவ னுதவி செய்தால் கஃபத்து எடுத்தவனைப் போலாம், ஆலிமான நாயகன் கிருபை ஆலத்தி லிறங்கு மாயிரம் ஆலிமுக்கும் தாலிபுல்லில் மூக்கும் ஆயிரத்தினில் ஒன்று குறை ஆலிமில் மற்றமனுடருக்கு அந்த ஒன்றுமே யிறங்கு மென்றார். 21

இல்மைப் படிப்பவன் ஒரு ஊருக்கு நேரே அவன் போன நேரமுதல், இல்மையுடையவன் நாற்பது நாள் அதாபை எளிதாக்கு வானூருக்கே வருமளவும். 22

ஆலிமளவிலே ஒரு ஹதியா ஆர்தான் கொடுத்தாலும் அதன் கூலிதான், ஆலிமான நாயகன் கொடுப்பான் அன்பியாக்களில் பனிரண்டு பேர், கூலியது கொடுப்பா னெனவே கூறினர் நபி ஹதீதுதனில் ஏதுமானவன் ஹதியாத்தனில் ஏது கொடுத்தாலு மதுபோலாமே. 23

ஆலிமை சியாறத்து செய்தவன் ஆல நபியை கண்டது போலின்னம் ஆலிமைச் சியாறத்துச் செய்தவன், ஆண்டோனைச் சியாறத்துச் செய்தவன், ஆலிம் கைதொட்டுச் சலாம் சொன்னது நபிக்கு அவன் சலாம் சொன்ன திண்ணம், ஆலிமுகத் தளவிற் பார்ப்பது அதுவு மிபாதத்தென் றுரைக்கலுற்றார். 24

ஆலிமுட னிருப்பது வணக்கம் அவருடன் தின்பதும் வணக்கம், ஆலிமானவ னெல்லா நாளும் கொடுப்பானுயிரம் ஷஹீது கூலி, ஆலி மவுத்துக்குச் சளித்தோனுக்கு ஆயிரம் ஷஹீதுக் கூலியே, ஆலிமில் மனிதருக்கே இல்மை படித்து கொடுப்பாரே அப்பேர்க்கொத்த ஆலி முடனேதா னிருக்கிறது வணக்கத்தில் லட்சமாண்டதிகம். 25

ஆலிமமனுடன் படிப்பிப்பது ஆயிரம் றக்ஆத்திலும் ஏத்தம் ஆலிமைச் சங்கை செய்தானுகில் அதுவும் எழுபது நபிசங்கையே.

இல்மைத் தேடினேன் மவுத்தாவது இறைபால் ஷஹீதாக மவுத்தானவன், இல்மைப்படித்ததி னமல் செய்தோர்கள் இறைவ

னபிமார்கள் கலீபாக்களாம், இல்முள்ளோன் புறத்தேதொழுதால் இவன் தான பிகூடத் தொழுததுபோல், இல்மாளியை யொருத்தனு வந்தால் இவர்கள் தன் பறக்கத்தால் பிழைபொருப்பான். 27

அறிந்த ஆலிமுக் கடையாளங்கேள் ஐந்துகாரிய மூண்டது வாம், சிறந்த வணக்கமும் தாட்சணையும் சேர்ந்தநற்குணம் புவி வெறுப்பும், பிறந்த உள்ளச்ச மிந்தஐந்தும் பேணுதோன் துன்யா உலமாவாகும், எறிந்த இபுலீசு மிவர்களுந்தான் இணையாமென ஷாபியிமா முரைத்தார். 28

தக்வாவில்லாத ஆலிமுக்குத் தாலத்திற் சிறப்புண்டுமானால், தக்வாவில்லாத இபுலீசவன் தரணியில்மிகச் சிறப்பானவன், தக்வாவை யுடையோரமலைத் தனியோன் கபூல் செய்வா னென்றதனால், தக்வா வுள்ளோர்க்கு ஜென்னத்தென்றும் சாற்றினான் நாயன் குறுஆனிலே. 29

எல்லாத்திலுங் கலப்பறுதல் வேணும் இதனையுட்போர்வை யாக்க வேணும், அல்லாவுடனேதா னதபுவேணும் அதனை வெளிப் போர்வை யாக்கவேணும், வல்ல ஒருவஸ்துவைத் தேடினோன் மேல் பகிலடிக்காமலிருக்கவேணும், எல்லார்க்கு மிறை கலப்பறுதல் ஈமானாகவு மாமினுமீன். 30

ஏழுவானத்து மலக்கைபோலே யிறையை வணங்கிலு மித மில்லாதோர், நாளைக்கியாமத்து நாளையிலே நட்டவாளரா யிருப் பார்களே, தோழமார்களே இல்மானது தொழில்களிலேசா யிருக்குமானால், ஏழை பரமாற்ற மெல்லாருந்தான் இல்மாளியாவா ரென் றறிவாய். 31

இல்முக்குத்தலை தீர்மானமும் இல்மிலமலிலும் தெளிவறிவாய், இல்முக்குத் தலை அல்லா அறிதல் இல்மின் தீர்மானஞ் செவ்வுறுதல், இல்மில் தெளிவது தௌஹீதாகும் இபாதத்தில் கலப்பற்றதாம், இல்மிலிது நாமறிந்தால் போதும் இல்முள்ளோரிதை யறிவார்களே. 32

அறிவு மாலை முற்றிற்று.

பயானுத்தீன் மாலை.

ஹயாத்துடன் சிபாத்திருப்பதையும் உடைய ஹக்குக்கெல்லாப்புகழும், ஹயாத்து நபியான ஹாதிபேரில் சையூம் ஸலவாத்தெப்போது முண்டாம், ஹயாத்தா யெப்போது மிருக்கப்பட்ட கவாசுகளைத் தொட்டும் பொருத்த மூண்டாம், பயானுத்தீன் மாலை பாடுதற்கு வல்லோனதற்கு நீ உதவிசெய்வாய். 1

தீனில் ரண்டுண்டு மொன்றுவது ஆண்டோனிடத்திலுள்ள தீன்தான் தீனைவழிப்பாட்டை மனிதர் தீனு யாக்கிக்கொண்டன ரந்த தீனும், தீனில் வழிகெட்ட தீனுவது ஆயிரத்தெழுநூறு தீனும், தீனுவது ஆண்டோனிடத்தி லிசுலாமென்றிறை குறுஆனில் சொன்னான். 2

தீனின்பறுலறி யிசுலாமீமான் தௌஹீத்மஃரிபத்திலு நாலுந்தான், தீனிலிசுலா மொன்றாயிருக்க தீனென்றிதை மட்டும் சொன்னதெல்லாம், தீனென்ற இசுலாமில்மற்ற தீனின் பறுலு மூன்று புகுதும், தீனில் நாலையும் எடுத்தவன் தான் தீனையுடையானென் றறிந்து கொள்வாய். 3

தீனினுவில்லை யொன்றை விட்டோன் வணக்கம் தெண்டிப்புங் கபூலாகாது, தீனினுலையு மறியவேண்டித் தெரிவாய் மஹ்மூது ஆலிம்சொன்னார், தீனை விவரித்து அறியவேண்டி அது போற்சுருக்கத்தில் செய்யவில்லை, தீனைபயானாகச் சொல்லினபேரும் நிலாமுல் அகாயிது எனச் செப்பினார். 4

தீனைவிபரமா யறியவேண்டிச் சேர்த்தேனுரையாக்க கித்தாபு பயான், தீனெனும் பேரு வைத்தேனதைப் பார்த்தாற் போதும் தீனறியாதார்க்கு, தீனின் கித்தாபுக ளோதினோர்க்குச் சேர்த்தேன் மசாயிலுத்தீ னென்றதை, தீனையுடையோர்கள் எல்லாருந்தான் தீனின் மசாயிலைப் பார்ப்பீர்களே. 5

இபுறாஹீம் நபிமக்களுக்கு ஒஸியத்துச் சொன்னதை யெல்லாரும், அபூவானோர் சொன்ன ஒஸியத்துப் போனால் அழகாய் யஃகூபுநபி யுஞ்சொன்னார், நபிமா ரிருபேரும் சொன்னசொல்லை நாயனமக்குத்தான குரானிற் சொன்னான், ஹபீபானோரே நாமிதன் படிக்கு நடந்தால் முசிலிமாய்க் கரைசேரலாம். 6

தவுருத்து இஞ்ஜீல் சபூறு புறுக்கான் காலிலும் தனியோன் கட்டளை, இபுறுஹீம நபியைத் தொடரச்சொல்லி யிருப்பதாலிவர்தா னென்ன, அபுவானோருக்கும் நபிமாருக்கும் அவர்மார்க்க மிசுலா மென்றறி, இபுறுஹீம் எகூதிநசாறு அல்ல மூசிலிமா யிருந்தா ரென்றான். 7

அசுலானோர் மூசிலிமானதால் அடங்கலும் ஞாய மிசுலாமா கும், இசுலாமல்லாமல் வேறேயானால் இபுறுஹீமுக்குப் பின்வேத மே, அசுல் கேட்பார்கள் சொற்படிக்கு அவர்பிந்த வந்ததில்லாவா ரோ, குகுரானகாபி ரானோரெல்லாம் ஹுஜ்ஜத்தாய்பேசி வழிகெட் டாரே. 8

மூணுவேதமும் காலம்வேதம் கொண்டுமுன்னவன் மாற்றிப் போட்டான், நாணமில்லாத காபிறுகள் காலாமவேதத்தைப் பொய் யாக்குவான், பேணுநபிமாரு மும்மத்துவும் பிந்தினவேதத்தி லா வார்கள், வீணானோர்களும் வழிகெட்டோரும் வெகுவாய்த் தர்க்கங் கள் கொடுப்பார்களே. 9

எல்லாநபிமாரும் வேதங்களில் இந்தஉம்மத்தின் ஏத்தங்கண்டு அல்லாவே யென்னையந்த உம்மத்தில்லாக்கென அவற்றைாறிந்தத னால், நல்லநபி மூசா ஈஸா தாவூத்நபிகளுட்பட அதுபோற்கேட்டார் வல்லா ஒருநபி உம்மத்துந்தான் இதிலேவருமதிற் பிசகில்லையே. 10

நல்லபுத்தியும் பூராயமும் உள்ளோர் நாயன் தீனிற் சேருவார் பொல்லாச்சுழியுள்ள மூதேவிகள் பொருந்தாச்செயல்களைச் செய்கிற வர், எல்லாவேதத்தை யோதினாலும் ஒருபோது மிதிலாகமாட்டார் நல்லமூசிலி மல்லாதோரெல்லாம் நரகத்தில்வீழ்வா ரிதுநிஜமே. 11

ஏழுநரகமும் ஏழுகூட்டத் தாருக்கே யிறையோன் படைத் தான், ஏழில் மூந்தின நரகமெல்லாம் ஞானிகளில்மாறு செய்தோ ருக்கும், ஏழிலாறும் எகூதி நசாறுவுக்கு மெல்சாபிஇனுக்கும் கீழான மஜூசி முசுரிக்கான கெட்டமுனாபிக்கிக்கும், ஏழாநரகத் திற் புகுகிறவன் எல்லாமுனாபிக்கு மொனறறிவாய். 12

மூணு அடையாள முனாபிக்குக்கு மூந்தினதவன்பொய் சொல் லுவான், காணுத்ததை யெல்லாங் கண்டதுபோல் சமைத்துச் கட்டியே யவனபேசுவான், பேணவுமாட்டான் வார்த்தைப்பாட்டை சதிமானம் செய்வான் பெரியகாபிர், நாணமில்லாத காபிறுடன் நா கிற் கிடப்பானென் றருளிச்செய்தார். 13

கள்ளுக்குடிக்கவும் சினாச்செய்யவும் ஹறுமானகின் ஸீறைத் தின்னவும், கள்ளமாப்பிள்ளை கொள்வதுடன் ஹறுலமைச்செய்வதைப்

பொருந்துவதும், கள்ளமார்க்கமேயல்லாமல் வேறே ஹக்கான வேத மொன்றுமில்லை, கள்ளனைக்கைகால் தறிக்காததால் களவுமிகுந்தது என்றறிவாய். 14

சினாச்செய்தால் ஹத்துச்செய்யாததால் சினாக்கள் ஆத்துக் கள் மிகுதமாச்சு, வினாவில் சினாச்செய்தால் ஹாருபாகப்போய் வெருவா மவுத்துகள் மிகுதமுண்டாம, சினாக்களழிவதுமூன்றினாலே கெட்ட சினா வட்டி பகீல்த்தனமும், முனாவையுடையவன் முகத் தாழ்ச்சியாய் முனபின் சொன்னாற்கால் மிடிமையாமே. 15

வேதத்திலொன்றைப் பொய்யாக்கினோம் அவன்தான் வேதத் தைப் பொய்யாக்கினோன், சேதமாய்ப்போவான் கியாமத்திலே சேர்வா னரகத்திற் காபிருடன், நீதமாகிய பனிதனொரு வேதமும் பொய்தானென்று சொல்லுவான், ஓதாதிருந்தாலு முண்மை யென் போன் ஒடுக்கத்திலவன் மூமினாமே. 16

ஈமானாலு காரியத்தைக்கொண்டு ஈமானையுமவன் கொண்டி ருப்பான், சீமான் ஐந்து காரியத்தையுந்தான் செய்துசக்கன்றி நிறைவேற்றுவான், கோமானபி சுன்னத்தடங்கலையும் கொண்டு வருவார்கள் மூமினானோர், ஆமானகாரியங்களிலே அவற்குச் சம்மதிபோல் நடப்பார். 17

நன்மையாகிய காரியத்திற் கூலிநம்மைப்போல் வணங்கமாட் டார், தின்மையைக்கண்டால் என்றமட்டுஞ் செய்யாதே யென்று விலக்கிக்கொள்வார், உண்மையாகிய முகுலிஸீன்கட் கிடையிலொரு போதும் தர்க்கமில்லை, இம்மையிலும் மறுமையிலுமவர் ஈடேற்றம் பெற்ற பேராகுமே. 18

அறபிகள் சாதாத்மார் களைத்தான் அன்புவைப்பார்கள் றசூ லுக்காக, குறுபில் குறைதலா யிருந்தாலுமே ஹுப்புவைப்பார்கள் கோபமாகார், இறையைத் தொட்டுத்தான் தேடுவார்கள் இறையோ ளளவில் ஆசையும்பயமும், அறவேறப்புடன் வேறேயொன்றை அவர்கள்காண மாட்டார்களென்றார். 19

காபிரானோர்கள் நரகத்திலே கிடக்கும்வேளையில் கவல்வதைக் கேள், காபியாகிய அல்லாவுக்கும் ஹபீபுல்லாவுக்கும் வழிப்படா மல், நபிக்கும் நபியாகவந்த நம்மிற் பெரியோருக்கும் வழிபட்டாமே ஷாபியாய்ச் சொல்வார் அவர்களுக்குஜஹன்னம மதிலை ரட்டிப் பாக்கென்றே. 20

பனிரண்டுமாலை முற்றிற்று.

Tamil Nadu ... Library
112033

Printed at Shahul Hameedia Press, Madras

எங்களது புஸ்தகங்களுள் சில:—

அன்வாருல் குர்ஆன் 1-வது (தமிழ் அல்ஹம்து ஜுஸூ அர்த்தத்துடன்)	0-12—0
அன்வாருல் குர்ஆன் 2-வது (தமிழ் யாஸீன் ஸூறு அர்த்தத்துடன்)	0—8—0
அன்வாருல் குர்ஆன் 3-வது (தமிழ் தபாரக் ஸூறு அர்த்தத்துடன்)	0—4—0
ஷை மூன்று புஸ்தகங்கள் சேர்ந்தது கலிகோ பைண்டு	1—8—0
தமிழ் யாஸீன் தல்கீன் சேர்ந்தது	0—7—0
தீனுல்இஸ்லாம் ஷாபி அறபும் தமிழும் சேர்ந்தது	0—6—0
நஸீஹத்து இஸ்லாம் ஷாபி	0-12—0
அஹ்காமுல் முஸ்லிமீன் ஷாபி	1—0—0
ஷை அறபுத் தமிழ் கலிகோ பைண்டு	1—8—0
நபிநாயகத்தின் திருவாக்கியம்	2—4—0
முஹயித்தீன் ஆண்டவர்கள் காரண சரித்திரம்	3—0—0
தரீகுல் ஜன்னா	3—0—0
மிப்தாஹுஸ் ஸலாஹ் பீ யீலாஹின் னிகாஹ்	3—0—0
யூனானி வைத்திய முறைகள்	3—0—0
கஸஸுல் அன்பியா பெரியது (3 பாகங்கள்)	9—8—0
முஹம்மது ஹனீபா யுத்த சரித்திரம்	3—0—0
நபி நாயகத்தின் ஜீவிய சரித்திரம்	8—0—0
மஜ்மூஉஸ் ஸலவாத் (தமிழ் கஞ்சுல் அர்ஷ்)	0-15—0
மஜ்மூஉ மௌலூது (தமிழ் மௌலூதுகள்)	0-15—0
கைத்தொழில் சம்பாதனை வழிகள்	2—8—0

கிடைக்குமிடம்:—

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்
ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸ்,
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ்-5.